"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2018

விளம்பி
வருடப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்



ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்



பெருமையுடன்
21வது
வருடத்தில்
RUBY'S
CATERING
020 8799 7180
www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk
உன்னத உணவு
வைபவ மண்டபம்
மகோன்னத உபசரிப்பு
திருமணம் - பிறந்த நாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா
ACCREDITED SRILANKAN CATERERS @
Hilton
உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......
Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 26

# கலசம்
# KALASAM

ஒலி 89

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## அவசரம் ஏன்?

ஒரு விழாவுக்குப் போவதென்றால் அதற்கெனச் சில விடயங்களை நாம் கவனித்துக் கொள்வோம். உதாரணமாக, ஒரு விவாகம் என்றால் எல்லோரும் பொதுவாக, தரமான பட்டு ஆடைதான் அணிவார்கள். பிறந்தநாள் என்றால் அதற்கெனப் பொருத்தமான உடை அணிவோம். மேற்கு நாடுகளில், ஒவ்வொரு நிகழ்வுக்கும் எப்படி ஆடை அணிய வேண்டும்; எப்படி, என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று வரை முறைகள் உள்ளன. சில உணவகங்களிலும் சில களியாட்டு நிலையங்களிலுங்கூடப் பொருத்தமான உடையணிந்து போகாவிட்டால் உள்ளேயே விடமாட்டார்கள். **கேரள நாட்டில் கோயில்களில் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் உட்பட உள்ள, சில கத்தோலிக்க ஆலயங்களிலும் உடலுறுப்புகளை விரசமாகக் காட்டும் உடைகளை அணிந்து செல்ல இயலாது.**

அப்படியெல்லாம் இருக்கும்போது நமது சைவக் கோயில்களுக்கு வரும் சிலர் மட்டும் மிக இறுக்கமாக, உடலோடு ஒட்டும் ஆடைகளை அணிந்து வருகிறார்கள். வேலையால் வீட்டுக்குப் போகும்போது கோயிலுக்கு வந்தேன். கடைக்குப் போய்விட்டு வருகிறேன் என்று இவர்கள் உடுத்தியுள்ள உடைக்கான காரணங்களையும் கூறுகிறார்கள்.

திருமணம், அரங்கேற்றம், இசைக் கச்சேரி என்று விழாக்களுக்குப் போகும்போது அதற்கென்று நேரத்தை ஒதுக்குகிறோம். முன்னதாகவே பல ஏற்பாடுகள் செய்கிறோம். அந்தந்த விழாவுக்கு ஏற்றவாறு உடைகளைத் தெரிவுசெய்கிறோம். ஆனால், கோயிலுக்குப் போவதற்குமட்டும் போதிய நேரத்தை நாம் ஒதுக்குவதில்லை. ஏன்? அவசரம் அவசரமாகக் கோயிலுக்குப் போய் அவசரமாகக் கும்பிட்டுவிட்டு ஓடுகிறோம். வேதனை என்னவென்றால், சில வேளைகளில் அபிஷேகம், பூசை என்று வழிபாடுகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது இந்த அவசரக்காரர்கள் வழிபடும் மக்களுக்கு இடையே நுழைந்து கோயிலை வலம் வருவார்கள். பொறுமையாக வழிபட அவர்களுக்கு நேரமில்லை. வீட்டுக்குப் போகவேண்டும் என்ற அவசரம்.

கோயிலுக்குப் போனால், ஆறுதலாக அமைதியாக இருந்து வழிபடவேண்டும் என்பதும் மற்றவர்களுக்கு இடையூறு இன்றி வழிபடவேண்டும் என்பதும் எழுதாத ஒரு சட்டம்; மரபு. பொருத்தமான சுத்தமான ஆடைகளை அணியவேண்டும். உடலிலுள்ள நெளிவு சுழிவுகளைக் காட்டும் வகையில் இறுக்கமான ஆடைகளை அணியாமல், வழிபட வசதி யான ஆடைகளை அணிந்துவந்தால் நன்றாக இருக்குமே!!

**க. ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| தானெனை ஆண்டவன் | 03 |
| ஸ்ரீசைலம் - பணயக் கட்டுரை | 07 |
| யுத்தப் புறப்பாடு - கந்தபுராணச் சிந்தனைகள் | 11 |
| கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே | 13 |
| அருட்குழந்தை | 15 |
| The Master Vs the Masses | 18 |
| கண்ணனும் தாத்தாவும் | 32 |
| Hinduism in search of answers | 35 |
| நாயன்மார் வாழ்வில் அற்புதங்கள் | 43 |
| எள் தீபம் எரிப்பது சரியா, தவறா? | 44 |
| எண்ணும் எழுத்தும் தந்த ஈசன் | 45 |
| Thirukural Stories | 47 |


**அட்டைப்படம்: ஞாலக்கோன்**



# தானெனை ஆண்டவன்

## வித்துவான் க வேந்தனார்

**வித்துவான் க. வேந்தனார்** அவர்கள் கால் நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்தில் தமிழ் வளர்ச்சிக்காகப் பணியாற்றியவர். 1947இல் திருவாவடுதுறை ஆதீனத்தின் **தமிழ்ப் பேரண்பர்** என்ற பட்டத்தையும் 1964இல் ஸ்ரீலங்கா சைவாதீனத்தின் **சித்தாந்த சிரோமணி** என்ற பட்டத்தையும் பெற்றவர். முப்பத்திரண்டு ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். அவரைப்பற்றிய விரிவான கட்டுரை ஒன்று 87ஆவது கலசம் இதழில் பிரசுரமானது. 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி வேலணையிலே பிறந்த **நாகேந்திரம்பிள்ளை**, மறைமலை அடிகள்மீது ஏற்பட்ட அபிமானத்தால் தன் பெயரை **வேந்தனார்** என்று மாற்றிக்கொண்டார். **இந்த ஆண்டு அவரின் நூற்றாண்டு.** கவிதை, கட்டுரைகள், புத்தகங்கள் பல எழுதிய வேந்தனார் அவர்களின் **தன்னேர் இலாத தமிழ்** என்ற கட்டுரைத் தொகுப்பு நூல் 2010இல் வெளியிடப்பட்டது. அதில் **மூவர் தமிழ் விருந்து** என்ற தலைப்பில் வந்த கட்டுரைகளைப் பிரசுரிக்கக் கலசம் விழைகிறது. அந்த முயற்சியில் வரும் முதலாவது கட்டுரை இது.

– ஆசிரியர்

இறைவன் அருட்பெருங்கடல். ஆருயிர்களின் அல்லலை அறுத்து ஆட்கொண்டருளும் தண்ணளியாளன். ஆருயிர்கள் ஆணவப் பிணிப்பினால் தாம் அடையவேண்டிய பேரின்பப் பெருவாழ்வை மறந்து, பிறந்தும் இறந்தும் பெருந் துன்பமடைகின்றன. ஆருயிர்களின் பிறப்பிறப்புத் துன்பங்களைப்போக்கி ஆட்கொண்டருளும் பேரருட் குணத்தை இயல்பாகவே உடையவனாய் இறைவன் விளங்குகிறான். அல்லற்பட்டு ஆற்றாது தம்மையே புகலென அடைந்த ஆருயிர்களை ஆட்கொண்டருளும் பேராளன் இறைவனே என்பதை உணர்ந்த அன்பர்கள் அவனை ஆண்டவன் என அழைத்து ஆவி உருகுவார்கள்.

ஆருயிர்களின் அல்லல்களை அறுத்து ஆண்டருளும் ஆண்டவனாகிய இறைவனுக்கு ஆருயிர்கள் என்றும் அடியவர்கள். **மீளா அடிமை உமக்கே ஆளாய்** என ஆண்டவனை ஆருயிர்கள் அனைத்தும் அல்லும் பகலும் சொல்லிப் பரவித் தொழுதற்கே உரியன. அன்னையினும் இனியோனாய்த் தம்மை ஆதரித்தும் அருள் ஈந்தும் பொல்லா வினைகளைப் போக்கி ஆட்கொண்டருளும் எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளை எண்ணி வியந்து நெஞ்சம் நெக்குருகும் இன்பம்; சிந்தையில் தேனூறித் தித்திக்கும் இன்பம்; ஆனந்த வெள்ளத்துள் அமிழ்ந்தி விருந்தயரும் இன்பம். திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். தோணிபுரத்தில் எழுந்தருளிய பெரியநாயகர் என்னும் இறைவனும் பெரியநாயகி என்னும் இறைவியும் காட்சிகொடுத்துத் தம்மையாள் கருணையைக் கவுணியர் கோனாகிய திருஞானசம்பந்தப் பெருமான் எண்ணி எண்ணி இதயம் நெக்குருகுகிறார். தாம் பொய்கைக் கரையில் நின்று அம்மே! அப்பா! என அழைத்து அழுதபொழுது, தோணியப்பராகிய இறைவன் உலக அன்னையாராகிய உமாதேவியாரோடு எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட அருட்செயலை அவரால் மறக்கவே முடியவில்லை.

தோளிற் சுமந்து தம்மையே ஆரா வேட்கையுடன் வளர்த்த தம் அருமைத் தந்தையார் 'ஆர் ஊட்டிய பாலை உண்டாய் எடா' என்று அதட்டிக் கேட்டுச் சினந்தபொழுது, அம்மையப்பர் கோலத்துடன் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட ஆண்டவனை அவரால் மறக்க முடியுமா? செந்தாமரை மலர்போன்ற பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து தமக்கு ஊட்டியருளிய பெரிய நாயகியார் என்னும் உமையம்மையாரை நினைக்கிறார். அவர் பாலைக் கறந்து ஊட்டிய அன்புடன் பால்கறந்த பொற்கிண்ணத்தின் அழகையும் நினைக்கிறார். உலகுயிர்கள் அனைத்துக்கும்

அன்னையாராகிய உமாதேவியார் பொற்கிண்ணத்தில் கறந்தூட்டிய பாலைப் பொல்லாதது - இழிந்தது எனக் கூறித் தம்மைச் சினந்த தம் தந்தையாரையும் நினைக்கிறார். தந்தையாரால் சினந்து வெறுத்துரைக்கப்பட்ட பொழுதும் தமக்குற்ற துணையாய் எழுந்தருளிக் காட்சி கொடுத்தாண்ட இறைவனையும் நினைக்கிறார்.

**"போதையார் பொற்கிண்ணத்து அடிசில்பொல் லாதெனத்**
**தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்"**

என்பது திருஞானசம்பந்தப் பெருமானின் அன்பும் வியப்பும் கலந்த குழந்தைக்குரல். இந்தக் குரலிலே கிடந்து அலைமோதுகின்ற ஞான வெள்ளத்தின் அகலத்தையும் ஆழத்தையும் எழுச்சி யையும் யாரால் அறிய முடியும்.

**போதையார் பொற்கிண்ணம்:**

திருஞானசம்பந்தப் பெருமானின் குழந்தை உள்ளத்தை அம்மையார் திருமுலைப்பாலைக் கறந்து ஊட்டிய பொற்கிண்ணத்தின் எழில் கவர்ந்துவிட்டது. பூவைப்போல அழகான கிண்ணம். பொன் தூய்மையானது. தீயில் இட்டு உருக்க உருக்க மாசு நீங்கி ஒளி கூடிக் கூடி விளங்குவது. திருவருள் வழிப்பட்ட மெய்யடியார்களின் உள்ளமும் பொன்போன்றது. அந்த உள்ளம் இறை வனின் திருவருளால் மலமாசு நீங்கி ஒளியுடையதாக விளங்கும். திருவருள் பதிந்த உள்ளத்திலே சிவஞானம் நிறையும். போதையார் பொற்கிண்ணமாகிய திருஞானசம்பந்தப் பெருமானின் திருவுள்ளத்திலே சிவஞானம் நிறைந்து நிலவுவது போலவே, மலமாசு நீங்கிய ஆருயிர்கள் என்னும் மெய்யடியார்களின் உள்ளத்திலும் திருவருள் பதியும். உலக நுகர்ச்சிகளில் ஊறித் திருவருளை மறந்த உள்ளத்தில் சிவஞானம் பதியாது. அந்த உள்ளத்தைத் திருவருளால் தூய்மைப்படுத்தவேண்டும். அவனருளாலே அவன் தாள் வணங்கவேண்டும்.

**அடிசில்:**

பொற்கிண்ணத்து அடிசில் என்றது சிவஞானத்தைக் குறிக்கும். அம்மையார் பாலாகக் கறந்து ஊட்டிய சிவஞானத்தையே சம்பந்தப்பெருமான் அடிசில் எனக் குறித்துள்ளார். ஞானபோனகர் எனச் சேக்கிழார் பெருமானும் திருஞானசம்பந்தப் பெருமானைப் போற்றி உரைத்த பொருளுரையை நோக்குக. சிவனருள் பதிந்த திருஞானசம்பந்தரின் திருவுள்ளத்திலே சிவஞானம் நிறைந்துவிட்டது என்பதைப் போதை ஆர் பொற்கிண்ணத்து அடிசில் என்னும் தொடர் குறிப்பாக உணர்த்துகின்றது.

**பொல்லாது என:**

திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப் பாலை உண்ட நற்செய்தியை - திருவருட் செயலைச் சிவ பாதவிருதயர் உணர்ந்திலர். அவர் திருஞானசம்பந்தர்மேல் மிக்க அன்புடையவர். சைவம் வாழ ஒரு தெய்வக் குழந்தை வேண்டுமென இறைவனிடம் இரந்து தவங்கிடந்தவர். சம்பந்தப் பெருமானைத் தம் மைந்தனாகப்பெற்ற தவத்திருவும் சால்பும் நிரம்பியவர். ஆனால், சிவனருட்செயலைத் தெளிந்துகொள்ளும் திருவருட்பேறு வாய்ந்திலர். ஆரோ தாழ்ந்த குலத்தவர் கொடுத்த பாலைத் தம்மைந்தன் அருந்திவிட்டானேயென்று எண்ணி, ஆறாச் சினங்கொண்டார். திருவருட் செயலை அறியாது சீறினார். சிறு கோல்கொண்டு தம்மைந்தனைத் தாக்க முற்பட்டார். இவரின் செயலை எண்ணிய சம்பந்தர் வியப்படைந்தார். திருவருட் செயலைத் தெளியும் பேறு தம் தந்தையாரிடம் இல்லை என்பதை எண்ணினார். உமையம்மையார் அளித்த ஞானப்பாலை

உண்டு நிற்கும் என்னை, ஊரார் அளித்த பாலை உண்டேனென உறுக்கி அடிக்க முனைந்தாரே என்னருமைத் தந்தையார். இவருக்கு யான் ஞானப்பால் அருந்தி ஞானம்பெற்ற உண்மையை எங்ஙனம் உணர்த்துவேன் என்று ஏங்கினார். இதனால் திருவருளை முன்னிட்டு நிற்கும் அன்பர்களின் செயல்களுக்கும், உலகியலை முன்னிட்டு நிற்கும் மாசுடையாரின் செயல்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

**தாதையார் முனிவுற:**

உலகியலில் அன்னை தந்தையராக எமக்கு அமைந்தவர்கள் வினைவழிப்பட்டவர்கள். அவர்கள் தாம் ஆற்றிய நல்வினை தீவினை என்னும் இருவினைப் பயன்களையும் நுகர்பவர்கள். திரு வருளை மறந்து வாழத் தலைப்படுவார்களானால் அவர்களுக்குத் திருவருட்செயல் புலனாகாது. சண்டேசுர நாயனாரின் தந்தையாராகிய எச்சதத்தன் போலவும் பிரகலாதனின் தந்தையாராகிய இரணியன் போலவும் திருவருளை மறந்து தீமைபுரியவும் தொடங்குவார்கள். உலகுயிர்கள் அனைத்துக்கும் தந்தையும் தாயுமாக விளங்குகின்ற இறைவன் அருளே உருவானவன். வினையில் நீங்கி விளங்கிய அறிவுடையவன். தாயிற் சிறந்த தயாவான தத்துவன். அவனை ஆருயிர்களாகிய நாம் மறந்தாலும் அவன் என்றும் எம்மை மறக்கவே மாட்டான். பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிவுயைடவன். எம்மை ஈன்று புரந்த உலகியல் தாயும் தந்தையும் எமக்குத் தீமைபுரிய முனைந்தாலும் அதனையும் தடுத்து எம்மைக் காப்பவன்.

திருஞானசம்பந்தப் பெருமான் தம் தந்தையாராகிய சிவபாதவிருதயர் தம்மை வெறுத்து முனிந்தபோது, இறைவனாகிய தந்தையார், அம்மையப்பர் கோலத்துடன் தம்முன் எழுந்தருளிக் காட்சிகொடுத்தாண்ட அருட்செயலை எண்ணி உருகுகின்றார். பெற்று வளர்த்த தந்தையாரினும் பார்க்க உற்ற துணையாக என்றும் உள்ளவன் இறைவனாகிய தந்தையாரே என்பதைத் தெளிந்தார்.

**தான் எனை ஆண்டவன்:**

தந்தையார் சினந்த நேரத்தில், தோடுடைய செவியனாய் விண்மேல் எழுந்தருளி, தூய மூன்றாம் பிறை நிலவை அணிந்து, திருமேனியில் திருவெண்ணீற்றைப் பூசிய திருக்கோலத்துடன் காட்சி கொடுத்தார். தந்தையார் சினந்தாலும் நீ அஞ்சவேண்டாமென அடைக்கலம் கொடுத்து ஆட்கொண்டார். தந்தையினும் இனிய தண்ணளியாளன் ஆகிய இறைவனைச் சம்பந்தர் கண்டுகளித்தார். தன்னைச் சினந்துரைத்த தந்தையாருக்கும் சுட்டிறந்த தூய முழுமுதற் சிவத்தின் திருவருட் கோலத்தைச் சுட்டிக்காட்டினார். அவர் கண்டிலர். மைந்தன், திருவருள் வழிகாட்டச் சிவஞானம் பெற்றுவிட்டான் என உய்த்துணர்ந்தார். தந்தையார் முனியவும் தன்னை ஆண்ட பெருங்கருணைத் தடங்கடலாகிய இறைவனின் இனிய திருக்கோலக் காட்சியை எண்ணி வியந்து ஏத்துகின்றார்.

> **"காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்**
> **பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே"**

எனத் தாதையார் முனிந்த நேரத்தில் காட்சிகொடுத்த கோலத்தை மீண்டும் சொல்லித் தொழுகின்றார். நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்கின்றார்.

**காதையார் குழையினன்:**

உலக அன்னையாராகிய உமாதேவியார் ஞானப்பால் ஊட்டியருளியதை நினைந்து முதலில் தோடுடைய செவியன் என அம்மையாரின் தோடணிந்த செவியை இடப்பாகத்தில் உடையவனாய் இறைவன் இடபத்தில் எழுந்தருளிய கோலத்தைக் குறித்தார். இச் செய்யுளில் அம்மையை ஏவிப் பால் ஊட்டுவித்த அப்பனாகிய இறைவன் குழை (கடுக்கன்) அணிந்த செவியை முதலில் நினைத்துக் கூறுகின்றார். தாம் அழுத குரலை அருளே உருவமாகிய உமையம்மையாரே முதலில் கேட்டாரென்றும், அதன் பின்பே இறைவன் கேட்டு அம்மையாரை ஏவி ஞானப்பாலை ஊட்டுவித்தாரென்றும், திருஞானசம்பந்தப் பெருமான் எமக்கு உணர்த்துகின்றார். திருவருள் காட்டவே ஆருயிர்கள் இறைவனைக் காண்கின்றன என்னும் உண்மையும் புலனாதல் காண்க.

**பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே**

இறைவன் ஆருயிர்களுக்கு உலகின்ப நுகர்ச்சியாகிய போகத்தையும் பேரின்ப நுகர்ச்சியாகிய வீட்டினையும் அம்மையப்பர் கோலமாக வீற்றிருந்தே அருள்கின்றான்.

ஆண்மையும் பெண்மையும் கலந்த அருட்கோலம் இல்லறவாழ்வின் ஏற்றத்தையும் உணர்த்துகிறது. பெண்ணினல்லாளொடு பெருந்தகை ஒன்றுபட்டு விளங்குவது போலவே, இல்லறத்தில் காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்ட நிலையும் அமையவேண்டும். அன்பு தனித்து வாழாது, இரு பொருள்களை ஒன்றாகக் கலந்து வைப்பதே அன்பின் செயலாகும். ஆருயிரும் ஆண்டவனாகிய இறைவனும் இரண்டறக் கலந்து நிற்கும் அத்துவித நிலையின் நிலைக்களம் இல்லறமேயாகும்.

இல்லறத்தில் தலைவனிடம் தலைவி தன்னை முற்றும் ஒப்புவித்து அவன் தன்மையாகவே நின்று இன்ப நுகர்ச்சி அடைதல் போலவே, ஆருயிர்களும் ஆண்டவனிடம் தம்மை முற்றும் ஒப்புவித்து, அவனடி நீழலில் உறைந்து பேரின்ப நுகர்ச்சி கூடும் என்க. போக வாழ்வின் நுகர்ச்சியே வீட்டை எய்துவிக்கும் வழியாகும் என்பதை உணர்த்தவே பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே என்றார். பேதையாளொடு எழுந்தருளியிருந்த பெருந்தகையாகிய இறைவன் தந்தையினும் இனியோன் என்பதால், அவன் ஆருயிர்கட்கு அருள் ஈந்து ஆட்கொள்ளும் போதெல்லாம் அம்மையுடன் உடனாய் வீற்றிருப்பான் என்பதும், அங்ஙனம் அம்மையுடன் உடனாய் வீற்றிருந்து உலகுயிர்கட்கெல்லாம் போகம் ஈன்ற புண்ணியன் ஆதல் பற்றியே பெருந்தகை எனப் புகழ்ந்து போற்றப்பட்டான் என்பதும் புலனாகும்.

**போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதென**
**தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்**
**காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்**
**பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே**

போது - பூ, ஆர் - உவமஉருபு, அடிசில் - உணவு (ஞானபோனகம்), குழை - ஆண்கள் காதில் அணிவது, பெருந்தகை - பெருந்தன்மை வாய்ந்தவன்

***நன்றி: தன்னேர் இலாத தமிழ் 2010, மித்ர வெளியீடு***

# ஸ்ரீசைலம்-திருபருப்பதம்

## ஜோதிர்லிங்க பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr கதிர்காமநாதன்

ஸ்ரீசைலம் ஏனைய ஜோதிர்லிங்களிலிருந்து வேறுபட்டதாய், புனிதமானதாய், பிரசித்தி பெற்றதுமாய் விளங்குகிறது. இத்தலத்தோடு சக்திபீடம் அமைந்திருப்பது அதற்குக் காரணமாகலாம். பதினெட்டுச் சக்திபீடங்களில் இதுவும் ஒன்று. சிவவழிபாடு செய்வோரும் சக்தி வழிபாடு செய்வோரும் இங்கு செல்வதால் இத்தலம் பெயரும் புகழும் பெற்று விளங்குகிறது.

இக்கோயில் மலையின்மீது காட்டுப்பிரதேசத்தில் இருப்பதால் சென்றடையச் சில நிபந்தனைகள் உள்ளன. கார்ச்சாரதி வழியை நன்கு தெரிந்தவராகவும், மது அருந்தாதவராகவும், மிக அநுபவம் உள்ளவராகவும் இருத்தல்வேண்டும். பகல் நேரத்திலேதான் பயணம் செய்தல்வேண்டும். ஏனெனில், காட்டு விலங்குகள் - யானை, கரடி, புலி ஆகியவை ஏராளமாக உலவித்திரியும் இடமாக இது இருக்கிறது.

**இறைவன்: மல்லிகார்ச்சுனர்** **இறைவி: பிரமராம்பிகை தேவி**

**இத்தலத்தின் மறுபெயர்கள்:**
பருப்பதம், திருமலை, ஸ்ரீகிரி, ஸ்ரீமலை, ஸ்ரீநகரம், ஸ்ரீபர்வதம்

**கொங்கணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்சடையான்**
**எங்கள்நோய் அகலநின்றான் எனவருள் ஈசனிடம்**
**ஐங்கணை வரிசிலையான் அநங்கனை அழகழித்த**
**பைங்கண்வெள் ளேறுடையான் பருப்பதம் பரவுதுமே** தி -1, ப 118, பா 4

**ஸ்ரீசைலப் பெயர்:**

பர்வதன் கடுந்தவம் செய்து அரனிடமிருந்து வரம் பெற்றான். சிவனின் பாதம் எப்போதும் தன்மீது இருக்கவேண்டும் என்பதே அந்தவரம். இதனால் சிவபெருமான் அவனை மலையாக்கி, தன்னைச் சிவலிங்கமாக்கி, மலைமீது அமர்ந்தார். இதனால் ஸ்ரீபர்வதமே பின்பு ஸ்ரீசைலம் ஆகியது. சைலம் - மலை.

**பயணம்:**
கார்ச் சாரதியைத் தெரிவுசெய்யும் சங்கடம் எமக்கு இருக்கவில்லை. ஹைதராபாத்தில் நாம் தங்கியிருந்த விடுதிக்காரரே காரையும் சாரதியாரையும் ஒழுங்குசெய்தார். வழமைபோல் மனைவியாரோடு காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகியது எமது தலயாத்திரை. கோயில் ஹைதராபாத்திலிருந்து 212 கிமீ தூரத்தில் உள்ளது. முதல் 60 - 70 கிமீ தூரம் மிகச் சுலபமாகச் செல்லக்கூடிய வழியாகும். இதன் பின்னர் நல்லமாலா மலை என்ற மலைத்தொடர் தொடங்கும். நல்ல - என்றபடி மிக அழகிய, ரம்மியமான, கண்ணுக்குக் குளிர்ச்சியான விருந்தளிக்கும் பிரதேசந்தான்.

கோயிலுக்குச் செல்லும் பாதை வளைந்து வளைந்து மேடு பள்ளத்தோடு இருந்தது. Hairpin bend அநேகம். கங்கோத்திரி, ஜமுனோத்திரி சென்ற பாதைகளை நினைவுக்குக் கொண்டுவந்தது. தப்பித் தவறி விழுந்தால் இறுதிக் கிரியை செய்ய உடல்கூடக் கிடைக்காது. செல்லும்போது அதலபாதாளத்தில் நீர்த்தேக்கம் ஒரு பெரிய வாவிபோன்று இருந்தது. உடனே

காரை நிறுத்தி, அழகை இரசித்து படங்கள் எடுக்கவேண்டியதாயிற்று. இதுதான் நீர்மின்திட்ட அணையாகும்.

இதை Srisailam Dam என்று கூறுவர். 1981ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இந்தியாவிலே இரண்டாவது பெரிய நீர்த்தேக்கம் இதுவாகும். ஆயிரத்து அறுநூற்று எண்பது அடி (1680) நீளம், நானூற்று எழுபத்தாறடி (476) உயரம் கொண்டு இருநூற்று முப்பத்தெட்டு (238) சதுரமைல் பரப்புடையது. கிருஷ்ணா நதிக்குக் குறுக்கே . அமைந்துள்ளது. கோயிலுக்குச் செல்பவர்களுக்கு இதைப்பார்த்து, இரசித்து, அநுபவிப்பது ஒரு மேலதிக மகிழ்வு (Bonus) ஆகும்.

பிற்பகல் 1மணிபோல் ஆலயத்தை அடைந்தோம். சாதாரணமாக 4 மணிநேரப் பயணமாகும். நாங்கள் நின்று, ஆறி, பார்த்து, இரசித்து வந்ததால் சற்று அதிகநேரம் எடுத்தது.

**வரலாறு:**

பல வரலாறுகள் உள. எமக்குச் சாதகமானதை மட்டும் விவரித்தல் நல்லது என்று கருது கிறேன். சந்திரகுப்த மன்னரின் மகள் சத்தியவதி ஆவார். ஒரு சமயம் அரசுக்குரிய பசுக்கள் பால் சுரக்கவில்லை. இதன் காரணத்தை அறிய பசுக்களை பருப்பத மலைப்பகுதிக்கு கொண்டு சென்றனர். அப்போது பசுக்கள் அங்குள்ள லிங்கத்தின்மீது பால் சொரிவதைக் கண்டனர். இதனால் சத்தியவதி அவ்விடம் சென்று நாள்தோறும் வணங்கி, வழிபட்டு வந்தாள். மல்லிகை மலர்களால் ஒவ்வொருநாளும் பூசித்தாள். இறைவனை மல்லிகார்ச்சுனன் எனக் குறிப்பிட்டனர்.

ஸ்ரீசைலம் ஆலயம் சுமார் 279,300 சதுரஅடி பரப்பளவு கொண்டது. சுற்றிலும் 20அடி உயரமும் 212 அடி நீளமுமுள்ள பிரகாரம். பிரகாரச் சுவற்றில் இருக்கும் 3153 கற்களில் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. பிரகாரத்தில் எட்டுத் திசைகளிலும் அட்ட பாலகர்கள் உள்ளனர். பிரகாரத்தின் அடிப்பாகத்தில் இரண்டு வரிசையில் யானைகள் குதிரைகள் பல கோணங்களில் அமைக்கப்பட்டுள்ளன.



**ஆலயதரிசனம்:**

ஆலயத்துக்குச் செல்லும் வழியில் சாட்சி கணபதி கோயில் உள்ளது. இங்குள்ள விநாயகரைத் தரிசித்த பின்னர்தான் ஸ்ரீசைலம் கோயிலுக்குச் செல்லவேண்டும் என்றொரு முறை உண்டு. ஆனால் எங்களுக்கு இது தெரியாததால் நாங்கள் அங்கு செல்லவில்லை.

பிரதான கோயில், கிழக்கு வாசல், அழகிய கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. கோபுரத்தைத் தரிசித்து அண்மித்தவுடன் முன்னாலிருக்கும் வீரபத்திரர் சுவாமியை வணங்கவேண்டும். பின்னர் கோபுர வாசலில் உள்ள படியை இறைவனின் திருவடியாகப் பாவித்து வழிபடவேண்டும்.

உள்ளே, முகமண்டபந்தான் பிரதான மண்டபம். இங்குள்ள சுவர்களில் சிவபெருமானின் திரு விளையாடல்கள் சிற்பமாகச் செதுக்கி யுள்ளதைப் பார்க்கலாம்.

அடுத்து நடு மண்டபம் உள்ளது. இங்குதான் நந்தி இருக்கிறார். இது சதுர அமைப்பில், நாற்பத்திரண்டு (42) தூண்களைக் கொண்டது. இதன் மேற்பகுதியில் ஊர்வலமாக யானைகள் செல்வதையும், மீன்கள், அன்னப்பட்சிகளின் உருவங்களையும் செதுக்கியிருப்பதைப் பார்க்கலாம். இரு பக்கத் தூண்களில் துவாரபாலகர் உள்ளனர். கீழே பெரிய நந்தி உள்ளது. இருபதடி உயரமும் பத்து அடி அகலமும் கொண்ட இந்த நந்தி, கல்லில் சிறந்த வேலைப்பாடுகளோடு மூலவரைப் பார்த்தபடி இருக்கிறது. மக்கள் நந்தியைத் தொட்டு வழிபடுகின்றனர். இவற்றைவிட,

பக்தர்கள் நந்திக்குக் கடலைமாலை சூட்டுவதும், பச்சைக் கடலைச்செடியை நந்தியின் வாயினருகிலே கட்டிவைத்துத் தம் கோரிக்கைகளை விண்ணப்பிப்பதும் இங்கு காணும் காட்சிகளாகும்.

இந்தக் கோயிலின் மூலஸ்தானம் சிறியது. அறுபது சதுர அடி (60) கொண்டது. இங்கு சிற்பவேலைகள் இல்லை. சிவபெருமான் - இருபத்தைந்து செ.மீ (25cm) அளவில் உள்ள மூர்த்தம் - இருந்து அருள் பாலிக்கிறார். காசி விசுவநாதரைப் போன்று மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிதாகவே உள்ளது. லிங்க உருவமான அரனை அனைவரும் சாதி, இன பேதமின்றி, தொட்டு, அபிஷேகம் செய்து வணங்கி வழிபடுகிறார்கள். இங்கும் தரிசனத்துக்குச் சிறப்பு வழி உண்டு.

இத்தலம் மூன்று நாயன்மார்களாலும் பாடப்பெற்ற தலமாகும். இவ்வாலயம் வனத்தால் சூழப்பட்டிருப்பதால் மூலிகை களிலிருந்து வரும் நறு மணங்களை நுகர முடிகிறது. சூழலும் அமைதி நிறைந்ததாகக் காணப்படுகிறது. இதனால், பல சாதுக்கள், ஞானிகளும் இங்கு இருக்கின்றனர். ஆலய எழிலிலும், சூழ்நிலையிலும் மயங்கிய சங்கரபகவத்பாவுலு என்னும் ஞானி தவம் செய்து 'சிவானந்தலகரி' என்ற நூலை இயற்றினார். ஸ்ரீசைலக் கற்குகைகளிலே இருந்து முத்தியடையவேண்டுமென்று இவர் கூறியமை இத்தலத்தின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

கோயிலின் வடதிசையில் சகஸ்ரலிங்க மண்டபம் உள்ளது. இங்கு கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஆயிரம் லிங்கங்கள் ஒரே லிங்கமாகக் காட்சி தருவதால் மக்கள் தரிசித்துப் பக்திபரவசம் அடைகின்றனர்.

கிருஷ்ணா நதிதான் பாதாள கங்கை என்ற பெயரில் வடதிசையில் ஓடி இவ்வாலயத்தைப் புனிதமாக்குகிறது. பக்தர்கள் படிக்கட்டுக்கள் வழியாக இறங்கித் தீர்த்தமாடிவிட்டுத் தலத்தைத் தரிசிக்கச் செல்கின்றனர். இக்கோயிலில் பரிவாரமூர்த்திகளாக விநாயகர், முருகன், அன்னபூரணி, தக்தாத்திரேயர், செஞ்சுலட்சுமி ஆகிய மூர்த்தங்களோடு வேறும் பல மூர்த்தங்கள் இருக்கின்றன.

**பிரம்மராம்பாதேவி ஆலயம்:**

மல்லிகார்ச்சுனர் கோயிலின் மேற்குப் புறத்தில் சற்று உயரமான இடத்தில் இவ்வாலயம் இருக்கிறது. விசாலமான படிகளில் ஏறித்தான் கோயில் வாசலை அடையவேண்டும். மேலே சென்றவுடன் கோபுரத்தையும் மண்டபத்தையும் காணலாம். முக மண்டபம் இருபத்துநான்கு (24) தூண்களைக் கொண்டது. முக மண்டபத்தின் உள்ளே, நடுவில் ஆதிசங்கரரால் தாபிக்கப்பட்ட சக்திபீடம் உள்ளது. இங்கு தினமும் பூசை நடைபெறுகிறது. அம்பாளின் உக்கிரத்தைத் தணிக்க ஆதிசங்கரர் இந்தச் சக்தி பீடத்தை அமைத்ததாகக் கூறுகின்றனர்.

**கர்ப்பக்கிருகம்:**

இது சதுரவடிவில் இருக்கிறது. தாமரைப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட லலிதாம்பிகை வடிவம் கர்ப்பக்கிருகத்தில் உள்ளது. அம்பாள் மகிஷாசுரமர்த்தினியாக எட்டுக் கைகளுடன் நின்று அருள்பாலிக்கிறார். மகிஷனை இடது காலால் உதைத்து அவனுடைய தலையை இடது கையில் பிடித்துக்கொண்டு வலது கையால் திரிசூலத்தை எடுத்து முகத்தைக் கிழிக்கிறாள். ஏனைய கைகளில் பிச்சுவாக்கத்தி (dagger), கதாயுதம் (mace), வாள், கேடயம் ஆகியவற்றைத் தரித்துள்ளாள். வலது தோளில் அம்பறாத்தூணி (arrow holder) இருக்கிறது.

**வரலாறு:**

அருணாசுரன் என்னும் அசுரன் பிரம்மாவை நோக்கித் தவஞ்செய்தான். தனக்கு இரண்டு கால்கள் உள்ளவர்களாலோ நான்கு கால்கள் கொண்ட மிருகங்களாலோ மரணம் சம்பவிக்கக்கூடாது என வரம் பெற்றான். வரம்பெற்ற காரணத்தால் எல்லா உலகங்களிலும் வாழும் உயிர்கள் அனைத்தையும் இம்சைப்படுத்திக் கொடுமை செய்தான். தேவர்கள் இதனாற் திகைத்துச் செய்வதறியாது ஆதிசக்தியைச் சரணடைந்தனர்.

அம்பாள் ஆறு கால்களையுடைய ஆயிரக் கணக்கான வண்டுகளை அவன்மீது ஏவினாள். ஒரே நேரத்தில் அவை அனைத்தும் அவனைத் தாக்கியதால் அருணாசுரன் அழிந்தான். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அம்பாள் பிரம்மராம்பிகையாக நிலைத்தாள். இதற்குச் சான்றாக ஆலயத்தின் பின்புறச் சுவற்றில் வண்டுகளின் ரீங்காரம் எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கிறது.
பிரம்மராம்பா - வண்டுகள்



Srisailam Bhramaramba Temple

தேவியின் ஆலயத்தின் விமானம் திராவிட முறையில் சிங்கங்கள், பெண் பூதங்கள் போன்ற சிற்பங்களைக் கொண்டிருக்கிறது. கிழக்கில் துர்க்கையும் மேற்கில் வைஷ்ணவியும் வடக்கில் பிரமியும் இருக்கின்றனர். இந்த அம்பாள் முன்னிலையில் பலியிடுதல் நடந்து வந்துள்ளது. ஆனால் இப்போது அது நிறுத்தப்பட்டுள்ளது.

பிள்ளைப் பேறடைய, திருமணத் தடை நீங்க, நினைத்த காரியம் நிறைவேற என வெவ்வேறு காரணங்களுக்காகப் பக்தர்கள் பெருமளவில் இவ்வாலயத்துக்கு வருகின்றனர். பதினெட்டுச் சக்தி பீடங்களில் இது சிவனோடு கூடிய அதிசக்திவாய்ந்த சக்திபீடமாகக் கருதப் படுகிறது.

ஸ்ரீசைலத்திலுள்ள பல கோயில்கள், குகைகள் ஆகியவற்றைப் பார்க்க ஒரு நாள் போதாது. குறைந்தது இரு நாள்களாவது தேவை. நாங்கள் மதிய உணவு உண்ணாமலேயே அங்கிருந்து திரும்பினோம். கார்ச்சாரதி, வளைவுகள் உள்ள தெருக்களைத் தாண்டி, செப்பமான தெருவுக்கு வந்தபின் சுமார் 3 மணி யளவில் ஒரு கிராமப் போசனசாலையில் வண்டியை நிறுத்தினார். பலர் அங்கிருந்து உணவு முடித்துச் சென்றுகொண்டிருந்தனர். ஸ்ரீசைல மகிமையோ என்னவோ, நம் மூவருக்கும் மகாபிரசாதம்போல அருமையான, சுவையான உணவு கிடைத்தது. அமிர்தத்திலும் அமிர்தம்!!!

ஸ்ரீசைலம் செல்வதற்கு உகந்த காலம் புரட்டாதி முதல் பங்குனிவரை உள்ள காலமாகும். பகலிலேதான் பயணம் செய்யலாம். இரு நாள்கள் தேவை. புகையிரத மார்க்கமாகப் போக நேரடிப்பாதை இல்லை. மார்கபூர், விநுகொண்டா நிலையங்களில் ஒன்றை அடைந்து பின்னர் பேருந்துமூலம் கோயிலை அடையலாம். விமானமூலம் விஜயவாடா அல்லது ஹைதராபாத் சென்று அங்கிருந்து கார் மூலம் அல்லது பேருந்துமூலம் போகலாம்.

### ஜோதிர் லிங்கத் தலங்கள் - பின்னுரை:

முன்பு அறுபத்துநான்கு (64) ஜோதிர்லிங்கத் தலங்கள் இருந்தன. பின்னர் ஆன்மிகவாதிகள், ரிஷிகள், ஞானிகளால் பன்னிரண்டாகக் குறைக்கப்பட்டன என்று அறியப்படுகிறது. இவற்றுள் இராமேஸ்வரம், ஸ்ரீசைலம், கேதாரம் ஆகிய மூன்று தலங்களே தேவாரப் பாடல்பெற்ற தலங்களாகும். மலைகளிலும், நதிக்கரைகளிலும், கடற்கரைகளிலும் ஊரின் நடுவிலும் இவைகள் உள்ளன. கேதாரமும் ஸ்ரீசைலமும் மலைமீது உள்ள தலங்கள். நதிக்கரையில் காசி, உஜ்ஜயினி, ஓங்காரம், திரியம்பகம், சோமநாதம் ஆகிய கோயில்கள் இருக்கின்றன. இராமேஸ்வரம் மட்டும் கடற் கரையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வைத்தியநாதம், குங்குமனேசரம் இரண்டும் ஊரின் நடுவே இருக்கும் ஜோதிர்லிங்கக் கோயில்களாகும்.

இந்த ஜோதிர்லிங்கக் கோயில்களுள், முதலிலே குறிப்பிட்டதுபோலச் ஸ்ரீசைலம் மட்டும் சக்திபீடத்துடன் அமைந்திருக்கின்றது. காசி என்ற ஒரேயொரு புண்ணியத் தலம் மட்டும் ஜோதிர்லிங்கத் தலமாகவும் புண்ணிய நதியோடு கூடிய தலமாகவும் முத்தித் தலமாகவும் பிரகாசிக்கிறது.

ஓம் நமசிவாய சிவாயநம ஓம்

# யுத்தப் புறப்பாடு

## கந்தபுராணச் சிந்தனைகள்

கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

யுத்தமொன்றிலே எவ்வளவு படைவலி, ஆயுதவலி, என்பன இருந்தாலும் மன வலிமைக்கேற்பவே முடிவுகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு வீரனும் அவனுடைய மன வலிமைக்கேற்பவே யுத்தம் புரிகின்றான். எதிரியைக் காணுமுன்னரே தன்னுடைய கையிலுள்ள ஆயுதத்தை வீசியெறிந்து விட்டு ஓடுபவனிலிருந்து, பல சாகசங்கள் புரியும் மாவீரர்கள் வரை நாம் காண்கின்றோம்; அவ்வாறானவர்கள் பற்றிக் கேள்விப்படுகின்றோம். இவ்வுலக வாழ்க்கையும் ஒரு வகை யுத்தமே, மனோவலிமை கூடியவர்கள் வெற்றியடைகிறார்கள், முன்னேறுகிறார்கள். மற்றையவர்கள் அடங்கி விடுகிறார்கள். உள்ள பொருளாதார வளமும் சுற்றியுள்ள சமூகமும் பிறந்த நாடும் உதவியாக இருந்தாலும் மனோவலிமைதான் வெற்றியையும் அதன் பரிணாமத்தையும் நிர்ணயிக்கின்றது. ஒரு தொழிற்சாலையை இயக்குகின்ற ஒரு பொறியிய லாளன், ஒரு சத்திரசிகிச்சையைச் செய்கின்ற ஒரு வைத்திய நிபுணன், ஒரு விமானத்தை ஓட்டிச்செல்லும் விமானி, ஒரு உதைபந்தாட்ட வீரன் இவர்கள் எல்லோரும் இவ்வாறான யுத்த முனையில் நிற்பவர்களே. பரீட்சைக்குச் செல்லும் மாணவனும் இவ்வாறான ஒரு யுத்தத்துக்குச் செல்பவனே. இவர்களின் மனோவலிமையையும் வெற்றித் தரத்தையும் எவ்வாறு பெருக்க முடியும்? கந்தபுராணத்திலே, வழமையாகச் சென்ற இடமெங்கும் வெற்றி பூண்ட பானுகோபன், சிங்கமுகாசுரன், சூரன் ஆகியோரின் யுத்தப் புறப்பாட்டை ஆராய்வதன் மூலம் சைவ தமிழ்க் கலாசாரத்துக்கமைய, யுத்தப்புறப்பாடு எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

**பானுகோபனின் யுத்தப்புறப்பாடு:**

தன்னுடைய பரிவாரங்களையெல்லாம் உசார் நிலையில் நிறுத்திவிட்டு, வீரத்திருவானவன் வீற்றிருக்கும் ஆயுதசாலைக்குப்போய் அங்குள்ள துர்க்கையை வணங்கிப் பூசித்தான்.

> **"ஏயிரும் பரிசனர் யாரையும் நிறீஇ**
> **மாயிருங் கலைமகள் வதிந்து வைகிய**
> **ஆயுத சாலையின் அவுணர் கோன்மகன்**
> **போயினன் தொழுதனன் பூசை ஆற்றினான்"**
>
> -முதல்நாள் பானுகோன் யுத்தப்படலம் 20

தொடர்ந்து பானுகோபன் வயிரத்தாற் செய்யப்பட்ட ஒளியுடைய வாளை இடையிலே கட்டினான். ஒளிவீசும் பீதாம்பரத்தை அதன்மீது உடுத்தினான். மேகத்திலே உள்ள இடியைப்போல ஒலிக்கின்ற வீரக் கழலைக் காலில் பூட்டினான். கவசத்தைப் பூட்டினான். அம்பறாத் தூணியைத் தோளில் மாட்டினான். பல அணிகளை அணிந்தான். தும்பை மலர் மாலையைச் சூடினான். நெற்றியின்மீது வெற்றி குறித்து அணிந்து கொள்கின்ற பொன் பட்டயத்தை அணிந்தான். ஒரு பெரிய வில்லை "வெற்றியுண்டாவதாகுக" எனச் சொல்லிக்கொண்டு எடுத்தான். மிகவும் வலியதாய, "யோகக் கணையைக்" கையில் எடுத்தான்.

**சிங்கமுகாசுரன் புறப்பாடு:**

சிங்கமுகாசுரன் மலைபோற் குவிந்த சோற்றையும் அருகில் இருந்த ஊன் மலைகளையும், இரத்தம், தேன், பால், தயிர் முதலானவற்றையும் பெரும் அளவில் உண்டான். நிலவுலகம்

முழுவதும் மணம் சூழ்ந்து கொள்ளுமாறு மணம் பொருந்திய பன்னீருடன் கூடிய கஸ்தூரி முதலியவற்றையும் கர்ப்பூரம் முதலியவற்றையும் உடலில் பூசினான். பல வகையான மலர் மாலைகளைச் சூடினான். பழைய அணிகலன்களைக் கழற்றி எறிந்துவிட்டு, அழகிய மாட்சிமை தங்கிய புதிய அணிகளைப் பூண்டான். நிகர் இல்லாத ஆயிரம் மலைகளின் உச்சிகள் தோறும் இளஞ்சந்திரர்கள் தோன்றியதைப்போல, உயர்ச்சியுடைய சிங்கமுகன், தன் ஆயிரம் நெற்றி களிலும் மென்மையான திருநீற்றைப் பூசித் தூயவனாயினன்.

**"படிதவிர் பரிப்பதம் பத்து நூற்றினின்**
**முடிதொறும் இளம்பிறை முளைத்த வாறுபோல்**
**நெடுமைகொள் அரிமுகன் நெற்றி தோறும்வெண்**
**பொடிதனை அணிந்தனன் புனித மாயினன்."**

-சிங்கமுகாசுரன் வதைப்படலம்

தொடர்ந்த சிங்கமுகாசுரன் தண்டையையும், சக்கரத்தையும், சிவபெருமானால் அளிக்கப்பட்ட சூலத்தையும், வச்சிரம் முதலிய தெய்வக் கணைகளையும், தாயார் கொடுத்த மாயா பாசத்தையும் எடுத்தான். மிகவும் உயர்ந்த சித்திர வேலைகள் அமைந்த தேரின் மீது ஏறினான்.

**சூரன் புறப்பாடு:**

சூரன் தன்னுடைய படையினர் எல்லோரையும் கொண்டு வருமாறு ஏவலரை அனுப்பினான். அவர்கள் மீண்டு வந்து எல்லோரும் வந்துவிட்டனரெனத் தெரிவித்தார்கள். உடனே சூரபன்மன் எழுந்து வாசனை மிக்க நீரில் மூழ்கி, நெருங்கிய ஐந்துவகையான உணவுடனே, ஆறு சுவைகள் கொண்ட சோற்றினை உண்டான். அதன் பிறகு நெற்றியிலே விபூதியை அணிந்தான். உடல் முழுவதும் சந்தனக் குழம்பைப் பூசினான். மலர் மாலைகளைச் சூடினான். ஒளி பொருந்த அணிந்திருந்த ஆடைகளை மாற்றி வேறு நல்ல இனிய ஆடைகளை அணிந்தான்.

**"நீற ணிந்தனன் நெற்றிமெய்ந் நிறைவிரை களபச்**
**சேற ணிந்தனன் பூத்தொடை பங்கியிற் செறிந்தான்**
**மாறில் பொற்சுடர்க் கலையுடன் அணிகலன் மாற்றி**
**வேறு வேறுநன் கினியன புனைந்தனன் விரைவில்"**

-சூரபத்மன் வதைப் படலம் 17

தொடர்ந்து சூரன் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட சிறந்த படைக்கலங்கள், தேவர்களின் படைக்கலங்கள், தெய்வக் கணைகள், சிங்க ஊர்தி, இந்திர மாஞாலத்தேர் எல்லாவற்றையும் கொண்டுவருமாறு ஆணையிட்டான். அதன்பிறகு தான் செல்வதற்கான தேரான அரிய பொற்தேரிலே ஏறினான்.

மூவரும் இறைவழிபாடு செய்கின்றனர். தம்முடைய பழைய வெற்றிகளை நினைவூட்டுவன எல்லாவற்றையும் அணிகின்றனர். இனிய ஆடைகளைப் புனைகின்றனர். வாசனைத் திரவியங்கள், மலர் மாலைகள் அணிகின்றனர். நன்றாக உண்கின்றனர். தம்முடைய சிறந்த ஆயுதங்கள் எல்லா வற்றையும் எடுத்துக் கொள்கின்றனர். இவையெல்லாவற்றிலும் சிகரமாக இருப்பது "வெண் பொடிதனை அணிந்தனன் புனிதமாயினன்" என்ற வரிகளே. இந்தப் புனித நிலைதான் வெற்றியின் முக்கிய காரணி. எல்லாம் இறைன் தர யான் கொண்டதேயன்றி என்னுடையது ஒன்றுமில்லை. **"...யாம்ஓதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்"..** என்ற அருணகிரியாரின் வாக்குக்கு அமைந்த ஞானநிலை இது. இதற்கு நேர் எதிரானது "விறலும் வன்மையும் இல்லவர் தாழ்வர் மேதக்க நெறியர் ஓங்குவர் ஈதுலகத்துடை நிகழ்ச்சி" என்று சொல்லும் உலகாயுதம். உலகாயுதத்தில் இருக்கும் நாம் எம்முடைய யுத்தங்களை எவ்வாறு அணுகவேண்டும் என்பதையே இம் மூன்று தலைசிறந்த வீரர்களின் யுத்தப் புறப்பாட்டின் மூலம் கந்தபுராணம் காட்டுகின்றது.

# கற்றவர் விழுங்கும் கற்பக் கனியே!
# மற்றவர் அறியா மாணிக்க மலையே!

-திருமதி சுகந்தி இந்துசேகரன்

இறைவன் நாதாதி தத்துவங்களால் உலகத்தைப் படைத்தான். எண்ணில் அடங்கா உயிரினங்களையும், உணர்வற்ற பொருள்களையும் படைத்தும், காத்தும், கரந்தும் வருகின்றான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. இறையாற்றல் ஒரு மாபெரும் சக்தியாகும். மனித சக்திக்கு அப்பாற்பட்ட பேராற்றலாக, பரம் பொருளாக, மெய்ப்பொருளாக, பேரறிவாக, எங்கும் நிறைந்ததாக, யாவற்றையும் தோற்றுவித்து, இயக்கி வாழ்வித்து வருவதாக இறை நிலையை உணர்ந்து, இறையுணர்வு பெற்று இதன் வழி மக்கள் வாழுகின்ற வாழ்க்கையே ஒழுக்கமான அறநெறி வாழ்க்கை எனப்படுகிறது.

"காட்டி நிற்கும் அண்டமெல்லாம் சாட்டையில்லாப் பம்பரம்போல் ஆட்டி வைக்கும்" பேருள்ளம் ஒன்று உண்டு. இந்தப் பேருள்ளத்தையே இறைவன் என்றும் வாலறிவன் என்றும் குறிப்பிடுகின்றோம். இறைவன் பேரறிவும் பேராற்றலும் கொண்டவன். மனிதன் சிற்றறிவும், சிறு ஆற்றலும் கொண்டவன். ஆதலால், சிற்றறிவும் சிறு ஆற்றலும் கொண்ட மனிதன் அந்த இறைவனை, அவன் படைத்தவைகளுக்கிடையே காண முயல்கிறான். இந்த முயற்சியின் விளைவாகவே கோயில்கள் உருவாக்கப்படுகின்றன.

**"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"** என்று சிவஞானபோதம் கூறுகின்றது. உயிர் **"சார்ந்ததன் வண்ணம்"** என்ற தன்மையைப் பெற்றிருப்பதால் உலகியலில் சிக்குண்டு மயக்கமுற்று வினைகளைப் புரிந்து கொண்டுள்ளது. இவற்றிலிருந்து விடுபடுவதற்காகவே ஆலயம் அமைத்துத் தந்துள்ளனர் நம் முன்னோர்.

கோயில்களில் வழிபாடு முக்கியமாக இடம்பெறுகின்றது. உடல் நலத்திற்கு உணவு எவ்வளவு முக்கியமானதோ, அதுபோல உயிர் நலத்துக்கு வழிபாடு மிகவும் அவசியமாகும். வழிபாடு என்பது ஒருவன் தன்னிலிருந்து தோற்றுவிக்கக்கூடிய ஒளி மிகுந்த பேராற்றலின் ஒரு பிறப்பிடமாகும். அதாவது, நம்மை நாமே தூய்மை செய்து கொள்ள முனையும் ஒரு சிறந்த நன்முயற்சியாகும். வழிபாடு செய்யும் பொழுது பாரொடு விண்ணாய்ப் பரந்திருக்கும் பரம்பொருளுடன் நம்மை நாம் தொடர்புபடுத்திக் கொள்கிறோம். இதனால், மனித வாழ்வின் குறை, நிறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு நாம் புத்தாற்றலும், புத்துயிரும் பெறுகின்றோம்.

நமது மனம் தூய்மையடைந்து ஒளிமயமாவதற்கு வழிபாடு இன்றியமையாத ஒன்றாகும். மனம் தூய்மைபெற மனத்திடம்தான் வழி உள்ளது என்பதை மகாகவி பாரதியார் தன் உள்ளக் குமுறலைப் பின்வருமாறு கூறுகின்றார்:

**"துணி வெளுக்க மண்ணுண்டு, தோல் வெளுக்கச் சாம்பலுண்டு,**
**மணி வெளுக்கச் சாணையுண்டு, மனம் வெளுக்க வழியில்லையே".**

"கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்பது பழமொழி. இறையுணர்வு கைவரப் பெற்றவர்களுக்கே அறநெறி வாழ்வு கைகூடும். இவ்விரண்டும் இணைந்த நிலையிலேயே ஆன்மிக வாழ்வு தித்திக்கும் என்பதனை ஞானிகள் தம் அநுபவ உணர்வில் கண்டுள்ளார்கள்.

இப்போது, மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் ஒரு பாடலையும், சேந்தனார் அருளிய திருவிசைப்பா ஒன்றினையும், நாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத்தின் ஒரு பாடலையும் பார்ப்போம்.

**மாணிக்கவாசகர் திருவாசகம்:**

**உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்**
**கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்**
**குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே**

கல்வி மேம்பாட்டினால் அகந்தை கொண்டு இருப்பவர்கள் நெறி அல்லாதவற்றை நெறி எனவும், உண்மையான நெறியை ஏற்காதவர்களாயும் இருப்பார்கள். ஆதலால் "கற்றாரை நான் வேண்டேன்" என்று இப்பாடல் வழி கூறுகின்றார் மணிவாசகர்.

**சேந்தனார் திருவிசைப்பா:**

**கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணை மாகடலை**
**மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்**
**செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத் திருவீழி மிழலைவீற் றிருந்த**
**கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம் குளிரவென் கண்குளிர்ந் தனவே**

இப்பாடலில், கற்றவர் என்பது ஞானச் செல்வர்கள் (அருளாளர்கள்) என்பதனையும், மற்றவர் என்பது, இறை அருளை வேண்டி நிற்பவர்களையும் குறிப்பது நோக்கற்பாலது.
இக்கருத்தினையே வள்ளுவப் பெருந்தகை:

**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"**

என்ற குறள் மூலம் விளங்க வைத்துள்ளார். இங்கும் வழிபாட்டின் சிறப்பும் ஞானக் கல்வியின் சிறப்புமே குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாவுக்கரசர் திருத்தாண்டகம்:**

**அரியானை அந்தணர்தம் சிந்தை யானை**
**அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்**
**தெரியாத தத்துவனைத் தேனைப் பாகைத்**
**திகழொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்**
**கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்**
**கனைகடலைக் குலவரையைக் கடந்து நின்ற**
**பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்**
**பேசாத நாளெல்லாம் பிறவா நாளே**

என்று இவ்வுலகத்தைப் படைத்த குறைவிலா நிறைவாகிய பேருள்ளத்தைப் போற்றிப் பாடிப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாள்களே என்று மெய்யுருகிப் பாடியுள்ளார் நாவுக்கரசர். ஞானிகள் பசித்து, தனித்து, விழித்து இருந்ததால் மரணமில்லாப் பெருவாழ்வெனும் மாபெரும் பதவியைப் பெற்றார்கள். இதனையே பசித்திரு, தனித்திரு, விழித்திரு என வள்ளலார் கூறியுள்ளார்.

தற்காலத்து வாழ்க்கை கண்டதே காட்சி கொண்டதே கோலமென ஆகிவிட்டது. இவ்வாறாக அல்லாது "நாலுபேர் சென்ற வழியே நட" என்ற பழமொழிக்கு ஏற்றவாறு அவர்கள் வழியே வாழ்ந்து,

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக் கவலை மாற்றல் அரிது"**

என்ற வள்ளுவர் குறளுக்கேற்ப, மனதை இறை வழிபாட்டில் செலுத்தி மற்றவர் (அருளை வேண்டி நிற்பவர்கள்) அறியா மாணிக்க மலையாகிய கற்பகக் கனியை நாமும் முகந்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்வோம்.

# அருட்குழந்தை அருளிய அமுதம்

**- அநுஜா -**

குழந்தைகளின் மழலை மொழியைக் கேட்டுப் பரவசமடையாத பெற்றோர் இல்லை எனலாம். பெற்றோர் மட்டுமல்ல, உற்றார் உறவினர் சுற்றியிருப்போர் யாவருமே மழலை கேட்டு மகிழ்வர். கோயில்களிலோ பிரயாணத்தின்போதோ மக்கள் கூடியிருக்கும் இடத்தில் குழந்தையின் மழலை அங்கிருப்போர் அனைவரையும் தன்பால் ஈர்ப்பதைக் காணலாம். அதனால்தான் வள்ளுவரும்,

**குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்**

என்று பாடினார்.

குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்காதவர்களே யாழும் குழலும் இனிமையான ஓசையுடையவை என்று கொண்டாடுவர் என்பது இந்தக் குறளின் கருத்தாகும்.

மழலைச் சொல்லுக்கு உலகில் ஈடு இணையில்லை. குழந்தையுள்ளம் கொண்டவர்களின் உள்ளத்திலேதான் உயர்ந்த கவிதைகள் தோன்றும். அதேபோல, ஞானப் பாலுண்ட ஞானக் குழந்தையாகிய சம்பந்தரின் திருப்பாசுரங்களும் ஒப்பற்றவை. படிப்போரையும் கேட்போரையும் பரவசப்படுத்த வல்லவை. பக்தியால் நெஞ்சைக் குழையவைப்பவை. குழந்தை பேச ஆரம்பிக்குமுன்பே இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறும். கண்களில் ஆச்சரியக்குறிப்பை வெளிப்படுத்தும், சிரிக்கும், கைதட்டும், தன் பாஷையில் ஏதேதோ சொல்லி மகிழும். ஞானக் குழந்தையாகிய சம்பந்தரும் தனது திருப்பாடல்களில் இறைவனை மட்டும் போற்றுவதுடன் நின்றுவிடாது, இறைவனின் தோற்றப் பொலிவையும் எம்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். அத்துடன் இறைவன் குடிகொண்ட திருத்தலத்தின் பெருமையை மட்டுமன்றி, கோயில் அமைந்துள்ள ஊரின் செழுமையையும் அழகையும் எடுத்தியம்புகிறார். நான்கு அடிகள் கொண்ட அவரின் திருப்பாடல்களில் இவையாவும் அடங்குகின்றன. எவரும் இலகுவாக விளங்கிக் (புரிந்து) கொள்ளக்கூடிய எளிமையான, இனிமையான சொற்கள், ஆழமான தத்துவம், அருமையான சொல்லாட்சி, காதுக்கினிய ஓசை நயம், பத்திச்சுவை ஆகியவை நிரம்பியவை ஞானக் குழந்தையின் திருப்பாசுரங்கள். இவற்றின் அருமை பெருமையைக் கண்டு அதிசயித்த அருண கிரிநாதர், தனக்கும் அவ்வாறு பாடும் ஆற்றலைத் தருமாறு முருகப்பெருமானை வேண்டுவதைப் பின்வரும் திருப்புகழின் அடிகளிற் காணலாம்:

**புமியதினிற் பிரபுவான புகலியில் வித்தகர்போல்**
**அமுதகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே**

தெள்ளுதமிழில், துள்ளுநடையில் பலநூற்றுக்கணக்கான திருப்புகழ்ப் பாமாலைகளை முருகன்மேல் பாடி மகிழ்ந்தவர் அருணகிரியார் என்பது யாவரும் அறிந்ததே.

சம்பந்தர் தனது "தோடுடைய செவியன்" என்னும் முதலாவது தேவாரத்தில் இறைவனின் தோற்றத்தை எப்படிப்பட்டது எனக் கூறுகிறார். தோடு அணிந்த காதை உடையவர். இடப (காளை) வாகனத்தில் உமையம்மையுடன் அமர்ந்திருக்கிறார். திருச்சடையில் தூய வெண்ணி றமான பிறைச்சந்திரனை அணிந்திருக்கிறார். சுடலையில் எடுத்த சாம்பலை உடல் முழுவதும் பூசியிருக்கிறார். தனது அழகிய தோற்றத்தால் என் மனதைக் கொள்ளைகொண்டுவிட்டார். இவர் ஒரு கள்வன் எனச் செல்லமாகக் கூறுகிறார். இந்த இறைவன், முன்னொரு காலத்தில் படைப்புக் கடவுளாகிய பிரமதேவன் வரம் வேண்டிவந்து வழிபட்ட பெருமைக்குரிய பிரபுரம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கிறார்.

"மடையில் வாளை" என ஆரம்பிக்கும் தேவாரத்தில் திருக்கோலக்கா என்னும் ஊரின் அழகும் இறைவனின் அழகும் வருணிக்கப்படுகின்றன. திருக்கோலக்காவில் காணப்படும் நீர்த் தேக்கங்களில் வாளை மீன்கள் வாழுகின்றன. அந்த நீர்நிலைகளில் நீராட வரும் பெண்கள் கைகளால் நீரை அடித்து நீந்தி மகிழ்கிறார்கள். அதனால் அங்கு வாழும்மீன்கள் குழப்பமடைந்து பயந்து அங்குமிங்கும் துள்ளிப் பாய்கின்றன. இந்தக் குறிப்பு, திருக்கோலக்கா ஒரு வளமான ஊர்; அங்கே மக்கள் மகிழ்வாக வாழ்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. அந்த ஆலயத்தில் இருக்கும் இறைவன் சடாமுடி உடையவர், அதில் பிறைச் சந்திரனைச் சூடியிருக்கிறார், இடுப்பில் ஒரு சிறு துண்டை ஆடையாக அணிந்திருக்கிறார். இந்த அழகான வளமான ஊரில் இருக்கும் இறைவன் ஏனிப்படி எளிமையான உருவம் கொண்டுள்ளார்? என்று கேள்வி கேட்பதுபோல "என் கொலோ" என்கிறார். ஒன்றுக்கும் வழியில்லாத பிச்சைக்காரன் போலத் தோற்றம் அளிக்கிறாரே ஏன்? என்று ஆச்சரியப்படுகிறார்.

**மடையில் வாளை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக் காவுளான்**
**சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்**
**உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ**

"வாழ்க அந்தணர்" என்ற தேவாரத்தில் உலகம் துயரின்றி இன்பமாக வாழ அரன் நாமம் ஓங்கி ஒலிக்கவேண்டும் என்று எடுத்துரைக்கிறார். அதற்கு எவை அவசியமானவை என்றும் தெளிவு படுத்துகிறார். சைவசமயத்தில் அந்தணர்களின் பங்களிப்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது. அவர்கள் இறைவனுக்கும் அடியாருக்கும் (பத்தர்களுக்கும்) பாலமாக அமைகிறார்கள். அவர்கள் தம் கடமையைச் சிறப்பாகச் செய்தல் அவசியம். மக்களுக்குப் பல விதத்திலும், ஆலயத் தேவைக்கும் (அபிஷேகம் - பால், விளக்கெரிக்க நெய்) மாடுகள் (பசு, எருது) பயன்படுகின்றன. அவை போற்றிப் பாதுகாக்கப்படவேண்டும். நாட்டில் மழை வீழ்ச்சி நன்றாக இருக்கவேண்டும், அதனால் நாட்டில் மக்கள் நலமாக வாழமுடியும் மற்றைய உயிரினங்களும் வாழமுடியும். நாட்டில் செல்வம் பெருகும், அரசாட்சியும் சிறக்கும். அரசாட்சி சிறப்பாக இருந்தால் தீயவை அழிவுறும் என்று இத் தேவாரத்தில் கூறப்பட்டுள்ளது.

**வாழ்க அந்தணர் வானவ ரானினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக**
**ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே**
**சூழ்க வையக முந்துயர் தீர்கவே**

"சடையாய் எனுமால்" என ஆரம்பிக்கும் பதிகத்தில் ஒரு பெண்ணின் துயரத்தைக் கண்டு மனம்பொறுக்காத சம்பந்தர், நீர் நிலைகளிலெல்லாம் அழகிய செங்கழுநீர் (குவளை) மலர்கள் பூத்துக் குலுங்கும் திருமருகலில் அமர்ந்திருக்கும் இறையவரே! நீர் செய்தது சரிதானோ? என்று நியாயம் கேட்கிறார். தான் மணக்க இருந்த மணவாளன் எதிர்பாராது பாம்பு தீண்டி இறந்துவிட்டான். செய்வதறியாது உன்னைச் சரணடைந்து, "சடாமுடி உடையவனே! விடையேறிய பெருமானே" என்று அலறி அரற்றிப் புலம்புகிறாள் அந்தப் பெண். அவளது துயரைப் போக்காது இருப்பது உனக்குப் பெருமைதரும் செயலோ? என்னும் சம்பந்தரின் வினாவைக் கேட்டு மனம் இரங்கிய இறைவன் இறந்தவனை உயிர்ப்பிக்கிறார் என்பது பதிகவரலாறு.

**சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்**
**விடையா யெனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே**

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" என ஆரம்பிக்கும் திருப்பாடலில், ஏதோ தான் முற்பிறப்பிற் செய்த தவப்பயனாலேதான் இப்பிறப்பில் நவமணிகளும் முத்துக்களும் நிறைந்த காவிரியாறு பாயும் திருவலஞ்சுழியில் அமர்ந்திருக்கும் இறைவனை நினைந்து, வாயாரப் போற்றிப் பாடி வழிபடும் பேரானந்தமும் பெரும்பேறும் தனக்குக் கிடைத்துள்ளது என்று தன்மனதுக்குச் சொல்கிறார்.

**என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து**
**முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்**
**மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்**
**பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே**

"மந்திரம் ஆவது நீறு" என ஆரம்பிக்கும் பதிகம் திருநீற்றின் பெருமையைக் கூறுகிறது. வாழ்வின் நிலையாமை என்னும் தத்துவத்தையும் உள்ளடக்கியது. திருநீறு சைவர்களின் அடையாளச் சின்னம். பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்க்கச் சம்பந்தர் அருளிய பதிகம். திருநீற்றின் முக்கியத்துவம் கருதி ஔவையாரும், "நீறில்லா நெற்றி பாழ்" என்கிறார்.

**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே**

இறைவனை வழிபட்டால் மண்ணுலகில் குறையின்றி எண்ணிய எண்ணியாங்கு வாழமுடியும் என்பதை "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" என்ற பதிகம் தெளிவுபடுத்துகிறது.



முத்தி அடைவதற்கு எளிதான வழி எது என்பதைக்கூறும் பதிகம்

**காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

நிறைந்த அன்பின் வெளிப்பாடு கண்ணீராகும். தாய் தன் பிள்ளை மீதுள்ள அன்பால், அது துன்பப்பட்டால் தான் கண்ணீர் விடுவாள். அது பெரும் பேறடைந்தால் அதற்கும் ஆனந்தத்தால் கண்ணீர் விடுவாள். (வள்ளுவர் - அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் - என்கிறார்) இறைவன் அருட்திறத்தை உணர்ந்த அடியார்கள் பத்தியால் கண்ணீர் பெருக்குவார்கள். தேவார திருவாசகங்களின் பொருளை உணர்ந்து பாடும்போதும் கண்ணீர் பெருகும். "நமசிவாய" என்னும் திருமந்திரத்தின் பெருமையை உணர்ந்து, உள்ளம் உருகி, கண்ணீர் பெருகத் தினமும் ஓதுபவர்கள் நற்பேறு அடைவார்கள் என்பதை இத் தேவாரத்தில் உறுதிப்படுத்துகிறார் சம்பந்தப் பெருமான். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களின் உட்பொருள் அனைத்தும் இந்த மந்திரத்துள் அடங்கியுள்ளது. இந்த மந்திரத்தைச் செபிப்பதன் மூலமே அட்டசித்திகளைச் சித்தர்களும் ஞானிகளும் பெற்றார்கள் என்பதை அவர்களின் வரலாறுகள் புலப்படுத்துகின்றன.

இன்றைய காலகட்டத்தில், மேற்குலகில் தியானந்தான் மனதுக்கு அமைதியையும் நிரந்தர மகிழ்ச்சியையும் தரும் என்பதைக் கண்டுபிடித்து அதில் கவனம் செலுத்த மக்கள் முற்படுகின்றனர். இதை என்றோ சம்பந்தர் எமக்கு எடுத்துரைத்துள்ளார். பத்தி வழி நின்று பரமனை அடைய, திருப்பாசுரங்களை அருளிய ஞானசம்பந்தரின் பதம் போற்றுவோம்.

# The Master Vs The Masses

**by Naga Chokkanathan**
**(Senior Software Development Engineer at Amazon)**

Imagine the situation: a small kid is learning to write or a young student is trying to improve his or her handwriting.




Their teacher writes a line on the top of the page in beautiful handwriting and asks them to copy it 10 times on the same page. Immediately, the kid or the student will start writing from the second line onwards and repeat it 10 times. This means, line 1 is written by the teacher and line 2 to 11 is written by the students. That's it, the practice is done.

While this method takes care of the quantity, there is a possible quality problem here: after the second line, the students unintentionally start following their own handwriting which is immediately visible above the line they are writing currently, and slowly lose track of the teacher's handwriting.

For example, when writing line 3, the student looks at line 2 and copies it; similarly, line 4 is written looking at line 3 and so on. Due to this practical problem, the first line, which contains the teacher's expert handwriting, is largely ignored. So, the students may not get the required practice to improve their handwriting. Instead, they are repeating same mistakes multiple times.

Experts suggest a simple trick to solve this problem. They ask the students to start writing from the 11th line and go all the way up till they reach the 2nd line. This means, instead of writing from line 2 to 11, write from line 11 to 2.


This simple change doesn't change the output (10 lines) but brings a huge change in the quality. The student looks at the teacher's handwriting continuously and all the 10 lines are written following the teacher's model line. So, the chances of student improving her hand writing with every line written are high, which is the goal of this exercise.

The effectiveness of this simple trick goes beyond handwriting practice. We can apply this in any learning and in areas where we seek continuous improvement.

One morning, I was standing at a traffic signal. There was a huge crowd in front of me; all of us were waiting for the 'walk' light to turn green. Suddenly, people standing in front of me started walking. So, I also started walking instinctively.

Within a few seconds, I realised that the vehicles were still coming from the opposite side, making our walk dangerous. I got nervous and looked at the 'walk' signal. To my surprise, it was still red.





People in front of me didn't care. They just ran to the other side, risking their lives.

That's when I realised that I have done the same mistake those handwriting-students did. Instead of looking at the 'walk' signal (teacher's handwriting), I had seen the other people (ie. pedestrians like me - my own handwriting) and followed them.

Imagine this happening on a large scale. Our society has thousands and thousands of people with a varied level of education, intelligence, different motivations, backgrounds and so on. We instinctively follow this society, instead of relying on "What is the right thing to do in this situation".

When you follow the master (the right thing to do), the chances of your continuous improvement are higher. When you follow the crowd (in which you are also part of), chances are that you are repeating the same mistakes and creating the impression (for others) that it is okay to make those mistakes.

To avoid this error, which gets propagated everywhere in an exponential level, we need to always think about what (or who) influences us: those whom we have accepted as our role models Vs those who represent the average world around us.


While this question looks obvious, deciding to follow one over the other is not easy. As social animals, we want to align with others. We don't want to be the odd one out.

Such an intention can help when most of the society does what is right. However, such an ideal society doesn't exist and this makes 'following the masses' a downward spiral. This is similar to the student writing line 2 to 11, her handwriting degrading in every step because her 'model to follow' is changing constantly and at some point, the real model is totally ignored.

So, if we want to improve from where we are today, we need to grow the muscles required to disagree with the masses, when required. That's the only way we can keep our focus on what is the right thing to do, without making compromises based on what others think as right.

It is not going to be a smooth walk. You might be criticised for not doing what others are doing.

For example, if everyone around you takes a shortcut to complete something and you refuse to do it, it may help you improve, but it makes others' life difficult. They are afraid of you setting a bad (!) example and raising standards for everyone; not many people like that.



**"I'm just doing what the other ones are doing"**

So, there will be constant pressure from the masses (who prefer low-standards for their convenience) to lower our bar. Yielding to this pressure will change our view forever and we will become part of the problem; no further improvement is possible because we will follow the average always.

Most people are selective about this. Some may have very high standards for work and yet, skip red lights in traffic signals or cheat their company by showing fake bills. They may think of this as calculated risk-taking but the casual attitude of accepting lower standards in a few areas has the tendency to affect other important areas too. They may not even notice this.

It is practically impossible for everyone to do the right things in everything, every time. However, if more and more people move towards this ideal scenario, the world will be a better place than yesterday.

I believe this is a life skill we need to teach our kids: set your bar high and don't let external factors compromise your view about what is right. Growing up with this attitude is a lot easier than changing it later as an adult.

There is nothing new about this. All our ancient books teach us these high standards. At some point, we started thinking that they are only 'good to have' or 'impractical' or 'not applicable anymore in this modern world.'

The truth is that these basic rules always apply and they are the secrets to a happy life with contention, instead of chasing success at any cost.

(Same principle applies when trusting any news and information that is available especially in social media. Get to the source and verify it before believing other people and spreading rumours verbally and on social media – Ed)




# அன்னையர் தினம்

# 12.03.2018








Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.



Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com




சிவயோகம்
SIVAYOGAM



இந்துக் கலாசார மையம்
128, Aurelia Road, Croydon CR0 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk





"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" - ஔவையார்

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் திருப்பணி

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம் உங்கள் எல்லோருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை முதற்கண் பிரார்த்திக்கின்றோம் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் ரூட்டிங்கில் 15 வருட குத்தகைக்கு எடுத்த வாடகைக் கட்டிடத்தில் 1996 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ஐந்து வருடத்திற்குள் திருக்கோயில் பெருவளர்ச்சிகண்டு லண்டனில் உள்ள சைவத் திருக்கோயில்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக தாயகப் பணிகளிலும். திருக்கோயில் செயல்பாட்டிலும் திகழ்ந்ததை நீங்கள் அறிவீர்கள். 15 வருடங்களின் பின்பு 5 வருடங்கள் வாடகைக் கட்டிடத்தில் குறைடன் ELMWOOD ROAD இல் தற்காலிகமாக இயங்கிப் பின் 2017 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் குறைடனில் (128, Aurelia road, CR0 3BF ) சொந்தமாக வேண்டிய இடத்தில் திருக்கோயில் அமையப்பெற்றுள்ளது. இவ்வாண்டு மாசி மாத இறுதியில் திருக்கோவில் அமைவதற்கான அரச அனுமதி கிடைத்துள்ளது இம்மகிழ்ச்சியான செய்தியை அம்பாள் அடியார்கள் யாவர்க்கும் தெரிவிப்பதுடன். ஆகம முறைப்படி அம்பாளுக்கு நிரந்தரத் திருக்கோயில் கட்டும் பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

அம்பாளின் கோயில் அமையவுள்ள காணியின் பெறுமதி £ 20 இலட்சம். அம்பாளின் கட்டிட நிதியாக அடியவர்களால் தரப்பட்ட £ 5 இலட்சம் முற்பணமாகக் காணிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது மிகுதி £ 15 இலட்சம் வங்கியில் கடன் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது புதிய கோயில் அமைப்பதற்கு £ 10 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

அம்பாளின் மூலஸ்தானம் உட்பட சில சந்நிதானங்களுக்கான கட்டுமானச் செலவை அம்பாள் அடியவர்கள் சிலர் பொறுப்பேற்றுள்ளனர் மற்றைய சந்நிதானங்களின் கட்டுமானச் செலவை ஏற்க விரும்பும் அடியார்கள் திருக்கோயில் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம்

"சிறு துளி பெரு வெள்ளம் " ஆவது போல அடியார்கள் தரும் சிறு நிதியும் திருக்கோயில் கட்டும் திருப்பணியை விரைவாக நிறைவேற்ற உதவியாயிருக்கும் எனவே அம்பாள் அடியவர்கள் யாவரும் தங்களால் ஆன நிதியுதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம்

### நிதி வழங்குவதற்கு

1 நிதியை பணமாகவோ அல்லது காசோலையாகவோ நேரடியாக ஆலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

2 வங்கியில் தொகையாகவோ அல்லது வங்கிக் கட்டளை மூலம் மாதா மாதமாகவோ செலுத்தலாம்

3 ஒரு தொகையை வட்டியில்லாக் கடனாகவும் தந்துதவலாம்.

ஆலயக் கட்டிட நிதிக்கான வங்கிக் கணக்கு

Name - SIVAYOGAM BUILDING FUND

Account No. - 20057541 Sort Code :- 20 21 78 BANK :- BARCLAYS BANK

காசோலை "SIVAYOGAM BUILDING FUND" என்று எழுதவேண்டும்

நாம் அனைவரும் எமது வரும்காலச் சந்ததியினர் நல்வாழ்விற்காக "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் முதுமொழிக்கேற்ப அம்பாளுக்குத் திருக்கோயில் அமைத்து தாயின் அருளைப் பெறுவோமாக

நன்றி

இறை பணியில் நாகேந்திரம் கருணாநிதி

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Orchid Bungalow
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

Jasmine Bungalow
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592


Trinity Community Centre
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139
Michael Calandra
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139

HOWEVER YOU SMILE

# SMILE WITH CONFIDENCE



Come to Bluebell for..

INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION

Book your FREE consultation today!

**Bluebell is a TOP DIAMOND STATUS Invisalign provider.**

**If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.**



Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Diamond Status Provider, a title which is only held by a privileged few dentists in the UK.

**Bluebell®**
Dental Practice and Clinic

www.bluebelldp.co.uk

**Tel: 020 8500 6789**
140 Tomswood Hill,
Chigwell, Essex IG6 2QP

invisalign DIAMOND PROVIDER
0% FINANCE AVAILABLE
YouTube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஏப்பிரல் (14-04-2018) தொடக்கம் ஓகஸ்டு (16-08-2018) வரை**

| | | |
|---|---|---|
| 14.04.2018 | சனி | விளம்பி வருடப்பிறப்பு |
| 29.04.2018 | ஞாயிறு | சித்திரைப் பௌர்ணமி |
| 07.05.2018 | திங்கள் | நடேசர் அபிஷேகம் |
| 09.05.2018 | புதன் | அப்பர் குருபூசை |
| 20.05.2018 | ஞாயிறு | சேக்கிழார் குருபூசை |
| 31.05.2018 | வியாழன் | சம்பந்தர் குருபூசை |
| 11.06.2018 | திங்கள் | ஆனிஉத்தர திருவிழா ஆரம்பம் |
| 18.06.2018 | திங்கள் | மணிவாசகர் குருபூசை |
| 20-06-2018 | புதன் | ஆனித்திருமஞ்சனம் |
| 16.07.2018 | திங்கள் | ஆடிப்பிறப்பு |
| 10.08.2018 | வெள்ளி | ஆடி அமாவாசை |
| 16.08.2018 | வியாழன் | சுந்தரர் குருபூசை |

*ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.*

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

**Registered Charity No: 292085**

## Membership Form

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam UK and enclose herewith cash/ cheque / Standing Order for £ ..................
Members are entitled to receive our information emails and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Banked Date | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# சைவ ஒளியொன்று அணைந்துவிட்டது



சைவத் தமிழ் உலகின் ஒளியாக விளங்கிவந்த சைவச் செம்மல் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் 14.03.2018 அன்று சிவபதம் அடைந்தார். அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை, கம்பன் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்துகொண்டுவந்த அம்மையாரின் மறைவு சைவத் தமிழ் உலகுக்கு ஒரு பேரிழப்பாகும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மறைவுக்குப் பின் பேச்சுத்துறையில் ஏற்பட்ட அந்த வெற்றிடத்தைத் திருமதி வசந்தா அம்மா அவர்கள் நிரப்பி வாழ்ந்தார்கள்.

1969இல் நடைபெற்ற நாவலர் தேசிய விழாவில் பெரும் பங்களித்த வசந்தா அம்மையாரை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை என்றும் நினைவு கூரும். சென்ற ஆண்டு கொழும்பு விவேகானந்த சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அம்மையார் என்னைச் சந்தித்தபோது, "நாவலர் அவர்களின் கல்விப் பணியைத் தொடருங்கள்; நாவலர் சிந்தனையைப் பரப்புங்கள்" என்று வாழ்த்தியதை என்னால் மறக்க முடியவில்லை.

தன் இறுதிக் காலத்தில் கம்பன் கழகத்தின் ஆலயத்தின் அருகில் அமைதியாக வாழ்ந்துவந்த அம்மையார் அவர்கள், அங்கேயே அமைதியைத் தேடிக்கொண்டார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

**ஐ தி சம்பந்தன்**

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை - சர்வதேச அமைப்பாளர்**

# ஆறாத் துயரில் சைவ உலகம்



அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் 18.02.2018 அன்று சிவபதம் அடைந்தார். சைவப் பெரியார்கள், தமிழ் அறிஞர்கள், அரசியல்வாதிகள், கிராம மக்கள் எல்லோரையும் கண்ணீர் வடிக்கவைத்த இழப்பைச் சைவ உலகம் ஈடுசெய்ய இயலாது தத்தளிக்கிறது.

திரு நீலகண்டன் அவர்கள் செய்துவந்த நற்பணிகளிற் சிலவற்றை இங்கே சுட்டுதல் சாலப் பொருந்தும். கால்நூற்றாண்டு காலமாக அகில இலங்கை இந்துமாமன்றத்தைக் கட்டியெழுப்பிச் செயற்பட வைத்த சைவப்பற்றாளர். கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் அபிலாசையை நிறைவேற்றும் வண்ணம் கொழும்பில் சைவகலாசார நிலையத்தை நிறுவ முன்னின்று உதவியவர். சைவசமயம் பற்றிய விழிப்புணர்வு நாடு முழுவதும் பரவ இந்து மாமன்றம் மூலம் பணிகளை முன்னெடுத்தவர். "இந்து ஒளி" என்ற இந்து மாமன்றத்தின் சஞ்சிகை சிறப்பாக வெளிவரவும், சர்வதேச சஞ்சிகையாக வளரவும் பாடுபட்டு வெற்றியும் கண்டவர். யாழ்ப்பாணத்தில் நாவலர் பெருமானின் கலாசாரத்தை வேரூன்றவைப்பதற்கென இந்து மாமன்னறத்தின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவிச் செயற்படவைத்தவர்.

பாடல் பெற்ற தலமும், வரலாற்றுப் பெருமை வாய்ந்ததுமான திருக்கேதீச்சரம் திருக்கோயிலை இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து மீட்டு, திருப்பணி செய்ய இந்து மாமன்றம் மூலம் இவர் எடுத்த முயற்சிகள் பாராட்டப்படவேண்டியவை. மறைவதற்குச் சிறுநேரத்துக்கு முன் ஹவாய் சுவாமிகளின் விழாவுக்கான ஏற்பாடுகளை, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் செய்துவிட்டு வீடு சென்றார். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

**ஐ தி சம்பந்தன்**

**சர்வதேச இணைப்பாளர் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை**

**மறைந்த இருவரின் குடும்பங்களுக்கும் கலசம் அநுதாபம் தெரிவிக்கின்றது**

# கண்ணனும் தாத்தாவும்



- முத்து -

சைவமுன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவு விழா மிகவும் வெற்றிகரமாக அக்டோபர் மாதம் நிறைவேறியது. கண்ணனும் தாத்தாவும் அழைத்ததின் பேரில் ஸ்ரீராமும் தாத்தாவும் விழாவைப் பார்க்க வந்திருந்தனர். அவர்கள், முதன்முதலாக இப்படியொரு விழாவைப் பார்க்க நேர்ந்ததில் மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டனர். கண்ணனும் தனக்குத் தெரிந்த அளவில் ஸ்ரீராமுக்கு நிகழ்ச்சிகளைப்பற்றி விளக்கிக் கூறிக்கொண்டு இருந்தான். தாத்தாமார் இருவரும் தங்களுக்குள் பேசி மகிழ்ந்தனர். விழா நிறைவுறும்போது நேரம் இரவு நள்ளிரவை நெருங்கிவிட்டபோதும் அவர்கள் அலுக்காமற் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பார்வையாளர்கள் களைத்துப்போகாமல் இருப்பதற்கு, சிற்றுண்டியும் சூடாகத் தேநீர், குளிர்பானம் ஆகியவையும் வழங்கப்பட்டமை உதவியாக இருந்தது. ஞாயிறு காலை ஒன்பது மணிவரை எல்லோரும் நன்றாகத் தூங்கி, பின் எழுந்துவந்து காலை உணவையும் முடித்த பின்பு சோபாவில் வந்து அமர்ந்தபோது இரவு நடந்த நிகழ்ச்சியே அவர்கள் அனைவருடைய மனதிலும் தங்கி நின்றது.

கண்ணன்: எப்படி ஸ்ரீராம்! Did you enjoy the programme last night?

ஸ்ரீராம்: ஓ! நன்றாகவே இருந்தது.

கண்ணன்: உனக்கு மிகவும் பிடித்த item எது என்று சொல் பார்க்கலாம்.

ஸ்ரீராம்: எனக்கு முதலில் பிடித்தது சின்னப் பிள்ளைகளின் dance. எனக்கு ஒரே சிரிப்பாக இருந்தது.

கண்ணன்: அவர்கள் தமிழ் பேசுவது கொஞ்சம் நீ பேசுவதுபோல எனக்குத் தெரிந்தது ஸ்ரீராம்!

ஸ்ரீராம்: ஓம் கண்ணா! நானும் அப்படித்தான் நினைத்தேன்.

சிவகுமாரும் தாத்தாவும் அது உண்மைதான் என்பதுபோலச் சிரித்தார்கள்

கண்ணன்: தாத்தா யாருக்கு எந்த நிகழ்ச்சி மிகவும் பிடித்தது?

தாத்தா: எனக்கு எல்லாமே நன்றாக இருந்தன. நான் எல்லாவற்றையும் இரசித்துப் பார்த்தேன் பிள்ளைகளே!

சிவகுமார்: ஸ்ரீராம் உனக்கு எவ்வளவு understand பண்ண முடிந்தது?

ஸ்ரீராம்: எனக்கு எல்லாம் understand பண்ண முடியவில்லை, தாத்தா!. கண்ணனும் சிலவற்றை எனக்குப் புரியும்படியாகச் சொன்னான். Dance, musical instruments எல்லாம் நல்லா enjoy பண்ணினேன். என்னைப்போலச் சிறுவர்கள் speech பண்ணினார்கள். I could not understand everything. புரிந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன் தாத்தா.

சிவகுமார்: ஆமாம் எனக்கும் அவர்களின் பேச்சு நன்றாகப் பிடித்தது. அதில் ஒரு சிறுமி ஆசிரியர் என்ற தலைப்பில் பேசினாரென்று நினைக்கிறேன். அற்புதம்! அற்புதம்!

தாத்தா: அவளின் பேச்சுத்திறன் அருமை. அதுமட்டுமல்ல அதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் (உள்ளடக்கம்) கூட அருமை. அதனைத் தயாரித்தவரும், அந்தச் சிறுமியை அவ்வாறு பேசப்பழக்கியவரும் எல்லோருமே பாராட்டுக்குரியவர்கள்.

சிவகுமார்: ஆமாம் நீங்கள் சொல்வதை நானும் ஒப்புக்கொள்கிறேன். நாற்பதாம் ஆண்டுவிழா நடத்தியதைவிட, நாற்பது திருமணங்கள் செய்து வைப்பது என்பது அரும்பெரும் சாதனைதான். (கண்ணன் தாத்தாமார் பேசுவதை ஸ்ரீராமுக்கு ஆங்கிலத்தில் விளங்கப்படுத்திக் கலசத்தில் வந்த படங்களையும் காட்டினான்)

ஸ்ரீராம்: படத்தில் பார்க்கும்போது I could understand more கண்ணா. I have never seen fourty wedding couples in this country கண்ணா.

கண்ணன்: நானுமே ஒருநாளும் பார்க்கவில்லை ஸ்ரீராம்!

தாத்தா: எவருமே பார்த்திருக்கமாட்டார்கள்! என்ன சிவகுமார் சொல்கிறீர்கள்?

சிவகுமார்: ஆமாம் முற்றிலும் உண்மை. இதுவரை எவரும் பார்த்ததில்லை, செய்ததும் இல்லை. இனிமேல் நடக்குமோ என்னவோ சொல்லமுடியாது. பாராட்டுக்குரிய நல்ல விஷயம்.

ஸ்ரீராம்: தாத்தா! நேற்று நாங்கள் பார்த்த நாடகம் மாதிரி கதை தெரிந்தால் ஒன்று சொல்லுங்கோ.

தாத்தா: எனக்கும் உன் தாத்தாவுக்கும் நிறையக் கதைகள் தெரியும். நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது அம்மா, அப்பா, தாத்தா பாட்டி ஒவ்வொருநாளும் கதை சொல்வார்கள். எங்களைச் சாப்பிட வைக்கக் கதை சொல்வார்கள்.

சிவகுமார்: அதுமட்டுமா? பக்கத்துவீட்டில் இருக்கும் பெரியப்பா, சித்தப்பா, மாமா, மாமி இப்படி எத்தனையோ பேர் கதை சொல்லித் தந்திருக்கிறார்கள். அவை எல்லாம் நீதிக் கருத்துக்களைக் கொண்டவை.

தாத்தா: அவைகள்தான் சிறுவயதில் எங்கள் மனதைப் பண்படுத்தியது எனலாம் சிவகுமார்.

சிவகுமார்: ஆமாம் இன்றுமே பல நினைவில் இருக்கின்றன. இங்கும் சிறுவர்கள் சிறு கதைகளை ஆங்கிலத்தில் வாசிக்கிறார்கள்தான். இருந்தாலும் தமிழில் இருப்பதைப்போல அறக்கருத்துக்கள் மனதில் பதியும்படி வலுவாக இல்லையென்று நினைக்கிறேன்.

தாத்தா: நானும் அப்படி நினைப்பதுண்டு. இப்போது நான் ஸ்ரீராமுக்கும் கண்ணனுக்கும் ஒரு சின்னக் கதை சொல்லப்போகிறேன். ஏனென்றால் நீங்கள் இன்று மத்தியானம் இங்கிருந்து புறப்படப்போகிறீர்கள். அப்போதான் இரவு வீட்டுக்குப் போய்ச் சேரலாம்.

ஸ்ரீராம்: உங்கள் கதை கேட்டபிறகுதான் நாங்கள் வீட்டுக்குப் போவோம் தாத்தா

தாத்தா: சரி ஸ்ரீராம் நான் உனக்கு ஒரு interesting story சொல்லப்போகிறேன் கேள்.

ஸ்ரீராம்: OK தாத்தா, அதற்காகத்தான் wait பண்ணுகிறேன்.

கண்ணன்: எனக்குத் தெரியுமோ அந்தக் கதை?

தாத்தா: நீ கண்டுபிடி பார்ப்போம். சுத்தோதனர் என்ற அரசனுடைய ஒரே மகன் சித்தார்த்தர். இவர் சிறு வயதிலிருந்தே எல்லோரிடத்தும் மிக அன்பாக இருப்பார். ஆடு மாடு போன்ற மிருகங்கள் பறவைகள் அணில்போன்ற பிராணிகள் எல்லாவற்றிலுமே கருணை உடையவராக (compassion) இருப்பார். ஒருநாள் அவருடைய நண்பன் தேவதத்தனுடன் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே அன்னப் பறவைகள்

பறந்துவந்தன. தேவதத்தன் தன் கையிலிருந்த அம்பால் அவற்றுக்குக் குறி வைத்து எறிந்தான். அவற்றில் ஒன்றுக்கு அம்பு பட்டது.

கண்ணன்: அது இறந்துவிட்டாதா தாத்தா? கண்ணன் கவலையுடன் கேட்டான் (கண்ணன் ஸ்ரீராமுக்கு விளங்காதபோதெல்லாம் ஆங்கிலத்தில் சொன்னான். அதனால் அவனும் சுவாரசியமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்)

தாத்தா: இல்லை கண்ணா! அம்பு பட்ட பறவை துடிதுடித்து சித்தார்த்தரின் காலடியில் விழுந்தது. அதன் உடம்பு நடுங்கியது. அதைப் பார்த்துச் சித்தாரத்தரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

ஸ்ரீராம்: சித்தார்த்தர் அதைப் பார்த்து அழுதாரா? பின்பு?

தாத்தா: அன்னத்தை எடுத்து அதனை அன்பாகத் தடவிக்கொடுத்தார். பிறகு மெதுவாக அதன் உடலில் இருந்த அம்பை வெளியே எடுத்தார். அரண்மனை வயித்தியரிடம் எடுத்துச்சென்று காயத்துக்கு மருந்துபோடச் சொன்னார். அதற்குத் தண்ணீரையும் உணவையும் ஊட்டினார். அன்னம் உயிர் தப்பியது.

கண்ணன்: உயிர் தப்பியதும் பறந்து போய்விட்டதா? தாத்தா?

ஸ்ரீராம்: எப்படி உடனே பறக்கமுடியும் கண்ணா?

கண்ணன்: ஓம் ஸ்ரீராம் it is not a good question.

தாத்தா: அன்னத்தின் புண் ஆறும்வரை சித்தார்த்தர் தன்னுடனேயே வைத்து கவனமாகப் பாதுகாத்தார். பின்பு தங்கள் தோட்டத்திலே விட்டுவிட்டார். அந்த அன்னம் சித்தார்த்தர் தோட்டத்துக்கு வந்தவுடன் அவருக்குக் கிட்டப்போய் நின்று அவரைச் சுற்றிச் சுற்றி வரும். சித்தார்த்தரும் அதனைத் தடவிக்கொடுப்பார்.

ஸ்ரீராம்: நல்ல கதை. எந்தப் பிராணியையுமே நாங்கள் துன்பப்படுத்தக் கூடாது. அன்பாக இருக்கவேண்டும்.

கண்ணன்: புத்தபகவானின் பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் சித்தார்த்தர் என்று நினைவுக்கு வருகிறது தாத்தா. நாங்கள் ஸ்ரீலங்காவில் புத்த கோயிலுக்குப் போனபோது நீங்கள் சொன்னீர்கள் தாத்தா.

ஸ்ரீராம்: புத்தர் ஒரு கடவுள் போல என்று கேள்விப்பட்டிருக்கிறேன் தாத்தா

தாத்தா: ஆமாம் ஸ்ரீராம், ராசகுமாரனான (Prince) சித்தார்த்தர்தான் புத்தபகவானாக மாறினார். அவர் ஒரு மகான்.

கண்ணன்: ஏன் தாத்தா? அது எப்படி அரசகுமாரன் மகானாக முடியும்?

சிவகுமார்: மேரியின் மகனாகப் பிறந்த யேசுதான் பின்பு கிறித்துவரால் வணங்கப்படும் யேசுநாதர் ஆனார்.

தாத்தா: ஆமாம் அதேபோலத்தான். சரியான உதாரணம் சிவகுமார். சித்தார்த்தரும் யேசுநாதரும் உலகில் மக்களெல்லாம் துன்பப்படுகிறார்களே! அவர்களின் கஷ்டங்களைப் போக்கவேண்டும் என்று நினைத்து வீட்டைவிட்டுப்போய் மக்களை அணைத்து அன்புடன் அறிவுரை கூறினார்கள். மக்கள் அவர்களை கடவுளாகப் போற்றி வணங்கினார்கள்.

சிவகுமார்: சித்ததார்த்தரை மக்கள் புத்தரென வணங்கினர். அவர்கள் புத்த மதத்தை உருவாக்கினார்கள். யேசுவை வணங்கியவர்கள் கிறித்துவ மதத்தை உருவாக்கினர்.

பாட்டி: ஸ்ரீராமும் சிவகுமாரும் வீட்டுக்குப் புறப்படும் நேரமாச்சு. எல்லோரும் சாப்பி வாருங்கோ

(பாட்டியின் சமையல் வாசனை எல்லோரையும் சாப்பாட்டு மேசைக்கு அழைத்துச் சென்றது)

# Hinduism in search of Answers........

Compiled by S Atputhananthan

## PILGRIMAGE

**Holy places (Continued from last issue)**

## Pancha Bootha Sthalams

**The word Jyothirlinga is made up of two words, Jyoti meaning 'Flame' and Linga, which represents Lord Shiva. The Jothirlingas are also Swayambu Lingas which mean they have emerged on their own (from Fire); ie were neither carved nor were a result of any human creation.**

**The names and the locations of 12 other Jyotirlinga's are stated in the Shiva Purana (Śatarudra Saṁhitā, Ch.42/2-4). These shrines as stated in Shiva Purana are:**




1. **Sri Somnath – Saurashtra (Gujarat)**
2. **Sri Nageswara – Near Dwaraka (Gujarat)**
3. **Sri Mallikarjuna – Sri Sailam (Andhra Pradesh)**
4. **Sri Mahakaleswara – Ujjain (Madhya Pradesh)**
5. **Sri Omkareswara – in Narmada River (150 km from Ujjain)**
6. **Sri Vaidyanatha- Deoghar (Jarkhand)**
7. **Sri Viswanatha - Varnasi or Kasi (Uttara Pradesh)**
8. **Sri Bhimasankara - Near Pune (Maharashtra)**
9. **Sri Ramaeswara - Rameswaram (Tamilnadu)**
10. **Sri Triyambakeswara - Nasik (Maharashtra)**
11. **Sri Kedarnath – Kedarnath (Uttar Pradesh)**
12. **Sri Ghrisneswara - Ellora (Maharashtra)**




**Twelve Jyotirlingas of Lord Shiva**

**Pancha Bootha stlhalams** - **grand temples dedicated to enshrining Shiva as a manifestation of the five elements (Pancha Bootha):**

1. **Kanchipuram Ekampareswar - (Earth) PRITHVI LINGAM**
2. **Thiruvanaikka - (Water) APPU LINGAM**
3. **SriKalahasti - (Wind) VAYU LINGAM**
4. **Thiruvannamalai – (Fire) JOTHI LINGAM**
5. **Chithamparam - (Space) AKASA LINGAM**

**All these temples are located in South India with four of these temples in Tamil Nadu and one (Sri Kalahasthi) in present-day Andhra Pradesh.**




## Ekambareswarar Temple ( Kanchipuram, Tamil Nadu)

**This is one of oldest functioning temples in India. Legend has it that once Parvati, the consort of Shiva was doing penance under the temple's ancient Mango tree near**






**Vegavathi river. In order to test her devotion Shiva sent fire on her. Goddess Parvati prayed to her brother, Vishnu, for help. In order to save her, he took the Moon from Shiva's head and showed the rays which then cooled down the tree as well as Parvati. Shiva again sent the river Ganga to disrupt Parvati's penance. Parvati prayed to Ganga and convinced her that both of them were sisters and so should not harm her. Subsequently, Ganga did not disturb her penance and Parvati made a Shiva Linga out of sand to get united with Shiva.**


## Mango tree at Ekambraeswara Temple

**It's the same tree where Kamakshi (Parvati devi) did penance for lord Shiva, and later their marriage took place here. Tree is said to be 3,500 years old whose branches are said to yield four different types (tastes) of mangoes. Eka means one and Amra means Mango.. and hence the name Ekambra - Lord of Mango Tree.**

## Jambukeswarar Temple (Thiruvanaikaval, Tamil Nadu)

This is the temple representing Water. The sanctum of Jambukeswara has an underground water stream and in spite of pumping water out, it is always filled with water.






One of the Legends: Once Parvati mocked Shiva's penance for betterment of the world. Shiva wanted to condemn her act and directed her to go to the earth from Kailayam (Shiva's abode) to do penance. Parvathi in the form of Akilandeswari as per Shiva's wish found Jambu forest (Thiruvanaikaval) to conduct her penance. She made a lingam out of water of river Cauvery (also called as river Ponni) under the Venn Naaval tree (the Venn Naaval tree on top of the saint Jambu) and commenced her worship. The lingam is known as Appu Lingam (Water Lingam).


Siva at last gave darshan to Akilandeswari and taught her Siva Gnana. As the Devi was like a student and Jambukeswara like a Guru (teacher) in this temple, there is no Thiru Kalyanam (marriage) conducted in this temple for Shiva and Parvathi, unlike the other Shiva temples.

There were two Siva Ganas (Siva's disciples who live in Kailash): 'Malyavan' and 'Pushpadanta'. They always quarrel with each other and fight for one thing or other. In one fight 'Malyavan' cursed 'Pushpadanta' to become an elephant on earth and the latter cursed the former to become a spider on earth. The elephant and the spider came to Jambukeswaram and continued their Siva worship. The elephant collected water from river Cauvery and conducted ablution to the lingam under the Jambu tree (Eugenia jambolana, the rose-apple tree) daily. The spider constructed his web over the lingam to prevent dry leaves from dropping on it and prevent sunlight directly falling on it. The elephant saw the web and thought it was dust on lingam. The elephant tore them and cleaned the lingam by pouring water and the practice continued daily. The spider became angry one day and crawled into the trunk of the elephant and bit the elephant to death, killing itself.

Siva, in the form of Jambukeswara, moved by the deep devotion of the two, relieved them from the curse. As an elephant worshipped Siva here, this place came to be known as Thiru Aanai Kaa (thiru means holy, aanai is elephant, kaa (kaadu) means forest). Later the name 'Thiruaanaikaa' become 'Thiruvanaikaval' .

## Arunachaleshwarar Temple (Thiruvannamalai, Tamil Nadu)

Annamalaiyar Temple is located at the foothills of the Annamalai Hills in the town of Thiruvannamalai, Tamil Nadu. Shiva is worshiped as Annamalaiyar or Arunachaleswarar represented as Agni lingam, with his consort, Unnamulai Amman






(Apitakuchalambaal - Parvati).
The temple complex spans 10 hectares and is one of the largest temples in India. It houses 4 gopurams (gateway towers) with the tallest being the eastern tower with 11 storeys and a height of 66 metres (217 ft), making it one of the tallest gopurams in India.

Legend has it that Shiva's consort Parvati once closed the eyes of Shiva playfully in the flower garden of Kailasha (the abode of Shiva). The whole universe was darkened for a moment and the earth was darkened for years, translating to a moment of time at Kailasha. Parvati performed penance with other worshippers and Shiva appeared as a flame of fire at the top of the Annamalai hill to remove the darkness. He merged his half to Parvati's in the form of Ardhanarishvara - the half-female, half-male form of Shiva. The Arunachala hill (meaning red mountain) or Annamalai Hills lying behind the temple is always associated with the temple. The hill is considered sacred and considered to be a lingam (representation of Lord Shiva) in itself.

The Karthigai Deepam festival celebrated during the full moon day in November–December during which a huge beacon lit on the top of the hill. It can be seen from miles around and believed to be Shiva's lingam of fire joining the limitless skies. Once the beacon is lit, pilgrims perform Girivalam - circling the hill by foot and worship the deity in the temple.

## Srikalahasti Temple (Andhra Pradesh)

**Sri Kalahasti temple is situated 36 km away from Tirupati is famous for its Vayu Linga. Lord Shiva is worshipped as Kalahasteeswara with his concert Parvati as Gnana Prasunambika Devi.**
**Legend:**








**There are several other legends connected to the glory of the temple. Prominent among them is of Parvati who was cursed by Lord Shiva to discard her heavenly body and assume the human form. To get rid of the above curse Parvati did a long penance here. Pleased with her deep devotion Lord Shiva again recreated her body – a hundred times better than her previous heavenly body and initiated various mantras including the Panchakshari. Consequent to this, Parvati gained fame and came to be known as Shiva-Gnanam Gnana Prasunamba or Gnana Prasunambika Devi.**

**The Shivalinga at Sri Kalahastiis marked by symbols of three creatures — that of a spider at the bottom, a five-hooded snake on top and elephant-tusks on either side. Legend informs us that Sri (spider), Kala (snake) and Hasti (elephant) were cursed by Brahma, Shiva and Parvati but attained moksha by worshipping Lord Shiva here. Hence Shiva came to be called Sri Kalahasteeswara. The temple also has a statue of the hunter Thinnan who offered his own kannu (eyes) to this Shivalinga and gained renown as Bhakta Kannappal.**

## Thillai Nataraja Temple (Chidambaram, Tamil Nadu)

**The deity that presides here is Lord Shiva in form of Nataraj - Lord of Dance. We can see Shiva as in pose of Nataraja performing the Ananda Tandava ("Dance of Delight") in the golden hall of the shrine. The consort deity here is Sivakami Amman (form of Amman - mother goddess and female energy).**

Legend:

**The story of Chidambaram begins with Shiva strolling into the Thillai Vanam (vanam meaning forest and thillai trees - botanical name Exocoeria agallocha, a species of mangrove trees - which currently grows in the Pichavaram wetlands near Chidambaram). In the Thillai forests resided a group of sages or 'rishis' who believed in the supremacy of magic and that God can be controlled by rituals and mantras or magical words.**

**Shiva strolled in the forest with resplendent beauty and brilliance, assuming the form of Bhikshatana, a simple mendicant seeking alms. He was followed by his consort, Vishnu as Mohini. The sages and their wives were enchanted by the brilliance and the beauty of the handsome mendicant and his consort. On seeing their womenfolk enchanted, the rishis got enraged and invoke scores of serpents by performing magical rituals. Shiva lifted the serpents and donned them as ornaments on his matted locks, neck and waist. Further enraged, the sages invoke a fierce tiger, whose skins and dons were used by Shiva as a shawl around his waist.**

**The Rishis gathered all their spiritual strength and invoked a powerful demon Muyalakan - a symbol of complete arrogance and ignorance. Shiva wore a gentle smile, stepped on the demon's back, immobilized him and performed the Ánanda Tandava (the dance of eternal bliss) and disclosed his true form. The sages surrender, realizing that Shiva is the truth and he is beyond magic and rituals.**

**The gold-roofed stage is the sanctum of the Chidambaram temple and houses the Lord in three forms:**
**the "form" - the anthropomorphic form as an appearance of Nataraja, called the Sakala-Thirumeni.**
**the "semi-form" – the semi-anthropomorphic form as the Crystal linga of**

**Chandramaulishvara, the Sakala-nishkala-thirumeni.**
**the "formless" – as the space in Chidambara-rahasyam, an empty space within the sanctum sanctorum, the Nishkala-thirumeni.**

**The Chidambara Rahasiyam:**
**During the daily rituals, the Chief priest, parts the curtain, indicating the withdrawal of ignorance and reveals the space, and the Lord's presence**

# ஆசாரக்கோவை

பழந்தமிழ் நூல்களும் நம்முடைய வைதிக சமயாசாரங்களைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கின்றன. "ஆசாரக்கோவை" என்றே ஒன்று இருக்கிறது. திருக்குறள் தொடங்கி 'ஔவை பாடல்கள்', 'நன்னெறி', 'அறநெறிச் சாரம்' முதலான நூல்கள் நீதிகளையும் தருமங்களையும் பொதுவாகச் சொல்லிக்கொண்டு போகும்போதே, அன்றாட வாழ்க்கையில் அநுஷ்டிக்கவேண்டிய வைதிகாசாரங்களுக்கும் அங்கங்கே குறிப்புக் காட்டிக்கொண்டு போகும்.

நீதி சாத்திரக் கருத்துக்களை அப்படியே மொழிபெயர்த்து 'நீதி வெண்பா' என்றும் இப்படி-யொரு புத்தகம் இருக்கிறது.

பழந்தமிழ் நாட்டில், எந்த அரசனைப்பற்றியும் புராணத்திலோ, இலக்கியத்திலோ, சாசனங் களிலோ சொல்லும்போது அவன் மநுநீதிப்படி, மறைவழி வர்ணாசிரமங்களை முறை பி-றழாமல் நன்றாகப் பரிபாலனம் செய்துவந்தான் என்று தப்பாமல் சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப் பொதுப்படையாக வைதிகாசாரங்களைச் சொல்வதோடு நிற்காமல் நித்தியப்படி வாழ்க்கையில் ஒவ்வொரு காரியமும் எப்படி சாஸ்திராசாரப்படி பண்ணவேண்டும் என்று விளக்கிச் சொல்வதற்கு ஏற்பட்டதுதான் நான் சொன்ன ஆசாரக்கோவை.

தமிழிலே உயர்ந்த இலக்கிய ஸ்தானம் கொடுத்துப் போற்றும் நூல்களில், பதினெண் கீழ்க்கணக்கு என்று பதினெட்டுப் புத்தகங்கள் உண்டு. இந்தப் பதினெட்டில் ஒன்றுதான் திருக்குறள். இன்னொன்று ஆசாரக்கோவை. தமிழ் மக்கள் அதைப் பார்த்தால் ஆசாரங்கள் அனைத்தையும் தெரிந்துகொண்டுவிடலாம்.

## உபகாரம் செய்யவேண்டும்.......

கிணற்றில் தண்ணீர் இருக்கு. தண்ணீர் என்னுடையதுதானே என்று சொந்தங் கொண்டாடி, கிணறே தண்ணீரைக் குடித்துவிடுவதில்லை. மரத்தில் பழம் பழுக்கிறது. "என் மரத்துப் பழம். நான்தான் சாப்பிடுவேன்" என்று மரம் பழங்களைச் சாப்பிடுவதில்லை. பசுமாடு பால் கொடுக்கிறது. பசு மாடு தன் பாலைத் தானே குடிப்பதில்லை. எத்தனையோ செடிகொடிகள் காய் காய்க்கின்றன. ஒரு காயைக்கூட அவைகள் தமக்கென்று வைத்துக்கொள்வதில்லை. இப்படி ஓரறிவு, ஈரறிவு படைத்த பிராணிகளேகூடப் பரோபகாரம் செய்கின்றன. மனிதனுக்கு ஆறறிவு என்கிறார்கள். அப்படியானால், மனிதன் மற்றவர்களுக்கு எவ்வளவு உபகாரம் செய்யவேண்டும்?

**காஞ்சி மகாபெரியவர்**

# நாயனார்கள் வாழ்வில் நிகழ்ந்த அருட்செயல்கள்

## திருஞானசம்பந்தர்

மூன்று வயதுப் பருவத்தில் சீகாழி திருத்தோணியப்பர் திருவருளால் உமையம்மை தன் முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் சுரந்து ஊட்டப்பட்டவர்.

திருக்கோலக்காவில் சிவபெருமான் திருவருளால் ஐந்தெழுத்துப் பொறித்த பொற்றாளம் பெற்றார்.

திருநெல்வாயில் அரத்துறையில் முத்துப்பல்லக்கு, முத்துக்குடை ஆகியவற்றைப் பெற்றார்

சீகாழியில் தனக்குத் குலமரபுவழி உபநயனம் செய்ய வந்த வைதிக அந்தணர்களுக்குத் திரு ஐந்தெழுத்துப் பெருமையை எடுத்தோதினார்.

திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லிமழவன் மகளைப் பிணித்திருந்த முயலகன் என்னும் கொடிய நரம்பு நோயைக் குணப்படுத்தினார்.

திருப்பட்டீச்சரத்தில் முத்துப் பந்தல் பெற்றார்.

திருஆவடுதுறையில் உலவாக்கிழியாக ஆயிரம் பொற்காசுகள் பெற்றார்.

திருமருகலில் பாம்பு கடித்து இறந்த வணிகனை உயிர்ப்பித்து மணவாழ்வு நல்கினார்

திருவீழிமிழலையில் பஞ்சம் போக்கப் பரமனிடமிருந்து படிக்காசு பெற்றார்.

திருமறைக்காட்டில் (வேதங்களால் அடைக்கப்பட்ட) திருக்கோயில் கதவினை மூடித்திறக்கு முகமாகச் சீராக்கினார்.

திருஆலவாய் என்னும் மதுரையம்பதியில் தம் மடத்திற்கு சமணர் தீ வைத்தபோது "பையவே சென்று பாண்டியற்கு ஆகவே" எனப் பணித்தார். மடத்திற்கு வைத்த தீ மன்னனுக்கு வெப்பு நோயாக மாறி வருத்த, ஞானசம்பந்தர் திருநீறு கொண்டு திருக்கையால் தடவ, மன்னன் வெப்பு நோய் நீங்கப் பெற்றான்.

சமணரோடு நிகழ்ந்த அனல்வாதம் புனல்வாதம் தர்க்கத்தில் சம்பந்தர் நெருப்பில் இட்ட ஏடுகள் பச்சையாக மிளிர்ந்தன. ஆற்றில் இட்டவை வெள்ளத்தை எதிர்த்துச் சென்று சைவ சமயத்தின் பெருமையை உலகறியச் செய்தன.

ஞானசம்பந்தர் கூன்பாண்டியனது உடற்கூனையும் உள்ளக்கூனையும் நீக்கி, நின்ற சீர். நெடுமாறன் ஆக்கினார்.

திருஓத்தூரில் ஆண்பனையைப் பெண்பனை ஆக்கினார்.

திருமயிலாப்பூரில் தனக்கு என வளர்க்கப் பெற்றுச் சில ஆண்டுகளுக்கு முன் அரவம் தீண்டி இறந்த பூம்பாவை என்னும் பெண்ணின் அத்தியிலிருந்து அவளை உயிர்ப்பித்து வளர்ந்த உருவினளாக வரவழைத்தார்.

தமக்கும் நம்பியாண்டார் நம்பிகளுடைய திருமகளுக்கும் திருநல்லூர்ப் பெருமணத்தில் நடந்த திருமணத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிவபெருமான் திருவடிப்பேறு அருளுமாறு செய்து தாமும் இறைமை எய்தினார்.

**-தகவல்: தில்லைத் திருப்பதிகங்கள் என்னும் நூலிலிருந்து**

# சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றுவது சரியா, தவறா?

காரியங்களில் ஏற்படக்கூடிய தடைகளை அகற்றி, வெற்றியைத் தருபவர் சனிபகவான். நவக்கிரகங்களில், சனிபகவான் என்றாலே எல்லோருக்கும் ஓர் அச்சமும், தவிப்பும் ஏற்படும். சனிபகவானுக்கான வழிபாடுகளும் பூசைகளுங்கூட வெகு சிரத்தையுடன் செய்யப்படுகிறது. "சனிபகவானைப்போலக் கொடுப்பவரும் இல்லை; கெடுப்பவரும் இல்லை" என்ற பயமே காரணம். சனி பகவானுக்கு எள்ளைக்கொண்டு தீபம் ஏற்றுவது சிலருடைய வழக்கமாக இருக்கிறது. ஆனால், சனிபகவானுக்கு எள்ளைக்கொண்டு தீபம் ஏற்றுவது தவறானது என்றும், சரியானதுதான் என்றும் இருவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. இதுகுறித்த நம் சந்தேகத்தைப் போக்கிக்கொள்வதற்காக, **திருநள்ளாறு ஆலயத்தின் அர்ச்சகர் கோடீஸ்வர சிவாசாரியரிடம் கேட்டோம்.**

"பொதுவாக, தானியங்களை எரிப்பது என்பதே தவறு. யாகங்களில், ஹோமங்களில் தானியங்களை முழுமையாகத் தீயில் சமர்ப்பிப்பது என்பது வேறு. அது அந்தந்தத் தேவதைகளுக்குரிய ஆகுதியாகச் சேர்ந்துவிடுகிறது. ஆனால், சனிபகவானுக்கு உரிய சமித்தான எள்ளைக்கொண்டு விளக்கேற்றுவது என்பது தவறான செயல். எள்ளில் இருந்து பெறப்பட்ட நல்லெண்ணெயைக் கொண்டுதான் விளக்கேற்றவேண்டும். அதுவே சாத்திரங்கள் சொல்லும் உண்மையும் கூட. காஞ்சி பரமாசாரிய சுவாமிகள்கூட, ஒருமுறை எள்ளை எரித்து விளக்கிடும் முறை தவறு என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஆர்வக் கோளாறினால் எவரோ செய்ததை, நாமும் ஆராயாமல் செய்வது தவறானது.** ஆகமங்கள் எங்கும் இந்த விளக்கைப்பற்றிச் சொல்லவேயில்லை. எள்சாதம் செய்து சனிபகவானுக்கு நைவேத்தியமாக்கிக் கொடுக்கலாம்; அது வேறு விஷயம். தானியங்கள் யாவும் ஒவ்வொரு கிரகத்தின் ஆதிக்கத்தைப் பெற்றவை. அந்தக் கிரகங்களின் குணாதிசயங்களைப் பிரதிபலிப்பவை. சனிபகவானின் குணங்களைக் கொண்டிருக்கும் எள்ளை, தீபத்தின் வழியாக எரிப்பது எந்த விதத்திலும் நல்லதன்று. இதனால் எதிர்மறை எண்ணங்களே உருவாகும். **யாரோ, எப்போதோ செய்ததால் அதைத் தொடர்ந்து எல்லோரும் செய்துவருகிறார்கள். சண்டிகேசுவரருக்குக் கையைத் தட்டிக் காண்பிப்பது, நந்தியம்பெருமானின் பின்பக்கம் தட்டுவதுபோன்ற ஆதாரமற்ற செயல்களைப்போன்றதுதான் எள் தீபம் ஏற்றுவதும்.** எள் சூடு. எள் நெய் குளிர்ச்சி. எள்ளை எண்ணெய்யாகத் தீபமிட்டு வணங்குவதுதான் சனிபகவானுக்குப் பிரீதியைத் தரும்.

இறைவனுக்கு ஒளியைத்தரும் விளக்கேற்றும் செயல் புண்ணியமான காரியம். கோயில்களில் விளக்கேற்றும் கைங்கர்யத்துக்காக, அரசர்களால் நிவந்தம் என்னும் பெயரில் தானமாக நிலங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. முக்கூட்டு எண்ணெய் என்று ஆதிகாலத்தில் பனையெண்ணெய், ஆமணக்கெண்ணெய், எள் எண்ணெய்தான் ஆலயங்களிற் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என வரலாறு கூறுகிறது. வசதியானவர்களால் மட்டுமே பசு நெய்கொண்டு விளக்கேற்றப்பட்டு வந்துள்ளது. இன்று விளக்கேற்றும் எண்ணெய் என வகை வகையாகப் பல எண்ணெய்கள் வந்துள்ளன. என்றாலும் எள் எண்ணெய் கொண்டு போடப்படும் தீபமே உத்தமமானது. அப்படி இருக்க **மகாலட்சுமி வாசம் செய்யும் எள்ளை எரித்து விளக்கேற்றுவது நல்லதன்று.**

தமிழகத்தில் இந்த வழக்கம் சில ஆண்டுகளுக்கு முன்னர்கூட இருந்ததில்லை. எள்ளை எரித்து விளக்கிடும் முறை இலங்கையில் இருந்துதான் வந்துள்ளது. அங்குதான் எள்ளைச் சிறு மூட்டையாகக் கட்டி, நல்லெண்ணெயில் இட்டு விளக்கிடுவார்கள். அது அப்படியே தமிழகத்துக்கு வந்துள்ளது. சனிபகவானின் விருப்பத்துக்குரிய சமித்தான எள்ளை எரித்து விளக்கிடவேண்டாம் என்பதே என் கருத்து. மனம் உருகி வழிபடும் பக்தர்களின் வேண்டுதல்களை இறைவன் நிறைவேற்றுவார். கருணாமூர்த்தியான இறைவன், கண்ணப்பரின் இறைச்சியையும், சபரி சுவைத்துப்பார்த்த கனிகளையும் ஏற்றுக்கொள்ளவில்லையா என்ன? ஆனால், ஆலயங்களில் வழிபாடு என்பது, பகவான் வகுத்துத் தந்த ஆகமங்களின்படிதான் செய்யப்படவேண்டும்." என்றார்அவர். நாமும் ஆகம விதிகளின்படியே விளக்கேற்றி இறைவனை வழிபடுவோம்; அனைத்து வளங்களையும் பெறுவோம்.

**நன்றி: மு ஹரி காமராஜ், ஆனந்தவிகடன்** **தகவல்: லண்டன் சபரி**

# எண்ணும் எழுத்தும் தந்த ஈசன்

## மூ. ரா பாரதிராஜா

**கசக்குது கணக்கு:**

இன்றைய குழந்தைகள் பலருக்கு கணிதப்பாடம் வேப்பங்காயாக இருக்கிறது. 'எல் சி எம்' (LCM), 'அல்ஜிபிறா' என விரியும் எல்லைகள் தெரியாமல் கணினியில் நிபுணத்துவம் பெறமுடியாது. காலத்தின் கட்டாயமாகவே கணிதப்பாடம் ஆகிவிட்டது. கணக்குப் புரியாவிட்டால் வாழ்க்கைக் கணக்குத் தப்பாகிவிடும். இது புரிந்துதானோ என்னவோ, எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தரும் இறைவனாக இன்னம்பூரில் ஈசன் அருள்பாலிக்கிறார்.

நம் முன்னோர்கள் விளையாட்டாகவே கணக்கை குழந்தைகளுக்குப் போதித்து வந்தனர். "ஆயிரம் மாகாணி அறுபத் திரண்டரை" என்பதுபோன்ற கணக்கு கற்றுத்தரும் வாய்ப்பாடுகள், சோழிகளை உருட்டி பல்லாங்குழி, தாயக் கட்டையை உருட்டி விளையாடல் போன்ற விளை யாட்டுக்கள் மூலமாக விரல்களுக்குப் பயிற்சி யோடு கணித அறிவும் வளர்ந்தது. ஏரம்பம், அதிசாகரம், கிளராலயம், கலம்பகம், கணிதரத்னம், திரிபுவனதிலகம் என்று பழமையான கணிதநூல்கள் தமிழில் உண்டு.

காணி, கழஞ்சு, நிறை, நாழிகை, சாண், காதம், விநாடி எனப் பல்வேறு அளவைகள் புழக்கத்தில் இருந்தன. வானவியலையும் நம்முன்னோர்கள் வாய்க்கணக்காகவே அறிந்து வைத்திருந்தனர். "மனக்கணக்கு" என்ற நினைவாற்றல் பயிற்சிமூலம் மாணவர்களைக் கணிதபாடத்தில் தேர்ச்சிபெறச் செய்தனர்.

இது மட்டுமா? இறைவன் தனது திரு விளையாடல்களில் கணிதத்தையும் ஒரு கை பார்த்திருக்கிறார்.

சுதன்மன் எனும் ஆதிசைவர் இன்னம்பூர் திருக்கோயிலின் பூசகர். தினசரி ஆறுகால வழிபாடுகளைச் செவ்வனே செய்து வந்ததோடு திருக்கோயில் வரவு செலவுக் கணக்குக் களையும் நிர்வகித்துவந்தார். அரசனும் அவர்மீது முழு நம்பிக்கை கொண்டிருந்தான். "சிவன் சொத்து குலநாசம்" என்பது சிவா சாரியார் அறியாததா?

இருந்தபோதிலும் அரசவையில் அவ்வப்போது சிறு சலசலப்பு. அரசர் திருக்கோயில் கணக்கரை முழுமையாக நம்புகிறார்; ஆனால் அங்கு ஏதோ சூது நடைபெறுகிறது என்று செவிவழிப் புகார்கள் அரசன் மனத்தில் சந்தேகத்தை விதைத்தது. அந்த சந்தேக விதை அசுர வேகத்தில் வளர்ந்து அரசனது சிந்தனையைக் குலைத்தது.

சுதன்மனை நேரில் வரவழைத்து விசாரிக்க வேண்டும் என்று அரசன் கருதினான். அதற்கு ஆணையும் பிறப்பித்தான். சுதன்மனுக்குச் சேதி வந்தது. அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. "இத்தனைகாலம் சிறிதும் அப்பழுக்கின்றி இறைபணி ஆற்றியுள்ள என்மீதா சந்தேகம்? எப்படி அரசர் முகத்தில் விழிப்பேன்? காலமெல்லாம் கட்டிக்காத்த கவுரவம் எங்கே போனது? கூண்டிலே கைதி போலக் கைகட்டி நிற்கும் நிலையல்லவா உருவாகிவிட்டது. சித்தமெல்லாம் சிவனே என்று இருந்த எனக்கா இந்த நிலை?" எனப் புழுங்கி அழுதான்.

பொழுது விடிந்தது. வழக்கம்போல் பூசையில் ஈடுபட்டான் சுதன்மன். "இன்னம்பூர் இறைவா! நீயே எனக்குக் கதி. நான் எழுதியுள்ள கணக்குக்கள் அத்தனையும் ஒருகுறையும் இல்லாதவை என்பதை நீயே அரசனுக்கு எடுத்துரைக்க வேண்டும். நான் அரசவைக்குப் போகப்போவதில்லை. உலகநாதராகிய உமது அவையிலே அடைக்கலம்" என்று கண்ணீர் மல்கப் பணிந்தான்.

ஈசன் தன் பக்தரைச் சிக்கலில் மாட்டி விடுவானா? சுதன்மன் சேவையை உலகோர்

அறிந்திடச் செய்ய அவனே நடத்திய நாடகமாயிற்றே. அரசவை கூடியது. மன்னன் சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்தான். கட்டியக்காரன் விசாரணைக்காகச் சுதன்மன் பெயரை மூன்றுமுறை கூவி அழைத்தான்.

அப்போது பிரகாசமான ஒளிப்பிழம்பு ஒன்று அங்கே தோன்றியது. கட்டுக்கட்டாகக் கணக்குப் புத்தகங்களைச் சுமந்தவாறு சுதன்மன் உள்ளே நுழைவதைக் கண்டனர் அவையோர். அந்த மாதேசுவரனே வருவதுபோல உள்ளதே எனச் சிலர் நினைத்தனர். உலகத்தோர் அனைவரின் கணக்கையும் எழுதுபவன் தனது திருக்கோயில் கணக்குகளை தனது பக்தனுக்காக அவனது உருவையே தாங்கியவாறு தன் தலையில் சுமந்துவந்துள்ளான் என்பதை அவர்கள் அறியவில்லை.

நேராக அரசன்முன் சென்று நின்றான். அரசன் முகத்தில் ஆச்சரியம். "இத்தனை பொலிவுள்ள இவனிடமா நாம் கேள்வி கேட்பது? இவனையா நாம் சந்தேகித்தோம்?" என அவன் மனம் குற்ற உணர்ச்சியில் குமைந்தது.

அரசன் வினாக்களை எழுப்பு முன்னரே சுதன்மன் திருக்கோயில் வரவு, செலவு, வசூல், நிலுவை எனப் பல்வேறு தலைப்புக்களில் கணக்குக்களை வரிசையாக அரசன்முன் வைத்து அன்றைய நாள்வரை எந்தக் குறையு மின்றிக் கணக்குக்கள் முடிக்கப்பட்டுள்ளதை எடுத்துரைத்தான். அரசன் அகமகிழ்ந்தான். சுதன்மனை அருகில் அழைத்துப் பாராட்டினான். தக்க மரியாதைகளோடு ஈசனே திருவுலா செல்வதுபோல சுதன்மனைப் பல்லக்கில் ஏற்றி திருக்கோயிலுக்கு அனுப்பிவைக்க ஆணை யிட்டான்.

அங்கே இன்னம்பூரில், "உன் கணக்கை யாமே தீர்த்துவைத்திட்டோம். இனி நீ அரசனைச் சென்று காணலாம்" என ஓர் அசரீரி ஒலித்தது. சுதன்மன் திகைப்போடு வெளியே வந்தபோது கண்ட காட்சி அவனை மெய்சிலிர்க்க வைத்தது. அவன் கண்களுக்கு மட்டும் ஈசன் பல்லக்கில் வரும் காட்சி தெரிந்தது. மக்கள் அதில் பார்த்தது சுதன்மனை. சுதன்மன் பார்த்தது மகேசனை; கணக்காளராகச் சென்ற கைலாச பதியை.

பல்லக்குத் திருக்கோயிலை அடைந்ததும் அதன்மீது அமர்ந்திருந்த சுதன்மனைக் காணவில்லை. எங்கும் நிறைந்த பராபரனே ரிஷபாரூடராக உலகோர்க்குக் காட்சிதந்து சுதன்மனின் உண்மையான சிவத்தொண்டினை வெளிப்படுத்தி மறைந்தான். தன்னுடைய அடியவனுக்காகக் கணக்குரைத்த எம்பெருமான் அன்றிலிருந்து எழுத்தறிநாதர் என்ற திருநாமங் கொண்டார்.

அகத்தியருக்கு இறைவன் இத்தலத்தில் தமிழ் இலக்கணம் போதித்தாராம்.

அட்சரபுரீசுவரர் என்பது இந்த இறைவனின் வடமொழிப்பெயர். கருவறை விமானம் தூங்கானைமாடமாக அமைந்துள்ளது. தவக் கோலத்தில் காட்சிதரும் சுகந்தகுந்தள அம்பிகைதான் தலத்தின் நாயகி பூங்கொம்பு நாயகி, கொந்தார்பூங்குழலம்மை என்று அன்னைக்கு விதம்விதமான பெயர்கள். நித்தியகல்யாணி சந்நிதி எழுத்தறிநாதர் சந்நிதிக்கு வலப்புறம் உள்ளது. இரண்டு அம்மன் சந்நிதிகள்.

ஈசன் நிகழ்த்திய அந்தத் திருவிளையாடலின் சாட்சியாக இன்னம்பூர் திருத்தலம் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் நகருக்கு அருகில் அமைந்துள்ளது. அந்த ஈசனைத் தொழுதால் கணக்கில் புலி ஆகிவிடலாம்.

**தகவல்: முனைவர் சாரதா நம்பி ஆரூரன்.**

**இந்தக் கட்டுரையில் ஊரின் பெயர் இன்னம்பூர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கும்பகோணத்தில் இருந்து சுவாமிமலை போகும் வழியில் புளியஞ்சேரி என்றொரு ஊர் உள்ளது. அதற்கு வடக்கே திருப்புறம்பயம் போகும் வழியில் 3கிமீ தூரத்தில் இன்னம்பர் என்றொரு ஊரில் ஒரு சிவத்தலம் உள்ளது. காவிரியின் வடகரையிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் 45ஆவது தலம். திரு ஞானசம்பந்தர் ஒரு பதிகமும் அப்பர் நான்கு பதிகங்களும் இக்கோயிலின்மீது அருளியுள்ளனர். இன்னம்பரும் இன்னம்பூரும் ஒரே கோயில்தான் என்று தோன்றுகிறது.**



# Thirukural stories
# திருக்குறட் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்
Mrs Savithiri Anandan

## வினைத்திட்பம் - Firmness of Action

**அதிகாரம்:** 67 **குறள்:** 667
**Chapter:** 67 **Kural:**667

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.**

உருளும் பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணி போல, வினைக்கண் உறுதியுடையாரை உடையது உலகம். அவரை வடிவின் சிறுமை நோக்கி இகழ்வதை ஒழித்தல் வேண்டும்.

Do not ridicule a person judging by the appearence of that person; only a small linch-pin holds the wheel of a very big chariot in position.

உதங்கர் ஒரு மகரிஷி, மாபெரும் ஞானி. பாரதயுத்தத்தின் போது பகவான் கண்ணன் விஸ்வரூபம் எடுத்ததை அறிந்து, தானும் அந்த காட்சியைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என்று வருந்தினார். அதையறிந்த கண்ணபிரான், அவருக்கு விஸ்வரூப தரிசனம் தந்தருள, ஆனந்த பரவசத்தில் மூழ்கினார் உதங்கர்.

“வேறென்ன வேண்டும்?” என்று கண்ணன் கேட்க, “இதைவிட வேறென்ன வேண்டும்?” என்று கூறி மெய்சிலித்தார் ரிஷி. எனினும் மீண்டும் மீண்டும் கண்ணன் வற்புறுத்தவே, “எனக்கு எப்போது தாகம் எடுத்தாலும், நான் வேண்டும்போது தண்ணீர் கிடைக்க வேண்டும்” என்றார். இந்த எளிய வரத்தை உடனடியாகக் கண்ணன் கொடுத்தார்.

நாள்கள் கடந்தன. ஒரு நாள், பரந்த மணல் வெளிப் பகுதி ஒன்றில் உதங்கரிஷி பயணம் செய்து கொண்டிருந்தார். கடும் தாகம் எடுக்கவே, “கண்ணா தாகம்” என்று கண்களை மூடித்துதித்தார். அடுத்த நிமிடமே அவருக்கு எதிரில் ஒரு புலையர் வந்தார். அவரது தோற்றம், பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்தது. அவரது கையில் ஒரு குவளை இருந்தது.

“தண்ணீர் அருந்துகிறீர்களா?” என்று கேட்டார். முனிவருக்கோ அவனைப் பார்க்கப் பார்க்க வெறுப்பு அதிகரித்தது. “வேண்டாம்” என்று மறுத்துவிட்டு, வேகமாக அப்பால் நகர்ந்தார். பின்பு, “கண்ணா இது என்ன அநியாயம்?” என்ற குமுறினார். கண்ணன் உடனே காட்சி தந்தார்.

“எதை அநியாயம் என்கிறாய்?” என்று கேட்டார். வரம் தந்து விட்டு, அதைப் பயன் படுத்த முடியாதபடி செய்யலாமா? என்று உதங்கர் சொன்னார். “தாகம் எடுக்கும்போது தண்ணீர் வேண்டும் என்றீர்கள்; அதற்கு ஏற்பாடு செய்தேன், நீங்கள்தானே அந்தத் தண்ணீரை மறுத்தீர்கள்?” என்றார் கண்ணன். “சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ண வேண்டாம் கண்ணா. அந்தத் தண்ணீரை ஒரு தீண்டத்தகாதவன் கையிலா கொடுத்து அனுப்புவது? தண்ணீர் கொடுத்தனுப்ப உனக்கு யாருமே கிடைக்கவில்லையா?” என்று உதங்கர் கேட்டார்.

“அடடா! நீங்கள் இதையெல்லாம் தாண்டியவர், மேம்பட்டவர் என்று நினைத்தேனே, அது தவறாகி விட்டதே” என்று கண்ணன் சொல்ல, உதங்கர் மௌனம் சாதித்தார். “உதங்கர்! உங்கள் மீதிருந்த அபிமானக் காரணமாக, உங்களுக்குத் தாகம் எடுக்கும் போதெல்லாம் தண்ணீருக்குப்

பதிலாக அமிர்தத்தையே வழங்கலாமென முடிவு செய்தேன். இந்திரனை அழைத்து உங்களுக்கு அமிர்தம் அளிக்கச் சொன்னேன். அவன் தயங்கினான். அமிர்தத்தைப் பெறக்கூடிய அளவுக்கு அவர் என்ன அத்தனை உயர்ந்தவரா? எனக் கேட்டான். நீங்கள் மாபெரும் ஞானி என்று அவனிடம் உங்களுக்காகப் பரிந்துரைத்தேன். அப்படியானால் அதை நானே சோதித்துத் தெரிந்து கொள்கிறேன் என்ற கூறிப் புலையன் உருவில் உங்களிடம் வந்தான். ஆனால், உருவத்தில் வேற்றுமை பாராட்டி, உயர்வு தாழ்வு எனப் பாகுபாடு பார்த்து நீங்கள் தான் எனக்கு அநியாயம் செய்தீர்கள்" என்று சொல்லிக் கண்ணன் மறைந்தார். உதங்கரிஷி வெட்கித் தலைகுனிந்தார்.

Uthankar was a Maharishi. A great Sage. He heard that Lord Krishna showed his "Vishvaroopam" at Gurushetra during the Mahabharat war. He was sad, that he did not have the opportunity to see that "Vishvaroopam" himself.

Suddenly Kannapiran appeared and showed his Vishvaroopam to Uthankar, who got overwhelmed by that precious scene and was ecstatic.

"What else do you want?" Kannan asked.

"Nothing more than this" Uthankar replied.

Again Kannan insisted that Uthankar asked for something more.

After a small pause, " Whenever I get thirsty, I should be able to get water; when I pray to you" said Uthankar.

Kannan gave this simple boon immediately.

Days passed by.

One day, Uthanka Rishi had to travel in a desert area where he became very thirsty. He closed his eyes,and prayed; "Kanna! I am thirsty".

At that moment an ugly looking and unkempt person with a vessel, appeared in front of Uthankar. He asked, " Do you want a drink of water?"

His undesirable appearance instilled hatred within Uthankar's mind, So he said "I don't want" and moved away.

Uthankar then complained to Lord Kannan; "Kanna! This is not fair".

Kannapiran appeared in front of Uthankar, and asked " What do you say was unfair?"

"You offered me a boon and then made me not to enjoy that" Uthankar replied.

"When you were thirsty, you asked me for water. I arranged for that. It is you who refused to accept the water", Kannan said,

Kanna! Don't think you speak smartly, why did you send water through an ugly person like him? Couldn't you get someone else to give me the water?" Uthankar questioned Lord Kannan.

"Oh! I thought you were a person who was above all the worldly things and treated all the same! but I am mistaken, it seems" Kannan replied.

Uthankar kept silence.

"Uthankar! I decided to give you ambrosia instead of ordinary water when you are thirsty because of the admiration towards you.. So I called Indran and asked him to do so. He refused asking what is high of you to offer ambrosia instead of water".

"I recommended you to him as a great sage. "If so, I will test Uthankar's and get to know about it". on saying this Indran came to you as a despicable human with Amirtham in his hand. But you considered only the appearance and refused to have the water in discrimination So it is you who had been unfair and cheated me".

After saying this Lord Kannan disappeared.

Uthankar bowed down in shame.


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14-04-2018 அன்று வெளியிடப்படுகிறது.